Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 21 சனிக்கிழமை (07.12.2013) பக்கங்கள் 20 ஓசை – 068



## மக்களின் மீள்குடியமர்வு விடாமுயற்சியுடன் தொடரும்

### ஐ.நா. அதிகாரியிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் மீள்குடியமர்வை மேற்கொள்வதற்கு எந்தத் தடைகள் வந்தாலும் அவற்றையும் தாண்டி அதை மேற்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும், வடக்கு மக்களின் வாழ்விடங்கள் அந்த மக்களுக்கே சொந்தம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கையாளர் சாலோக பெயானியைச் சந்தித்து வடக்கு நிலைவரம் குறித்து உரையாடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (19) பக்கம் பார்க்க...

# பல்கலைக்கழக நகரம் கிளிநொச்சியில் நிர்மாணம்

## 2,270 மில்லியன் செலவில் செயற்திட்டம்

(கொழும்பு)

கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்கள் அமைந்திருக்கும் பகுதியை பல்கலைக்கழக நகரமாக உருவாக்குவதற்கு விசேட செயற்திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளது.

இந்த நகரமயமாக்கல் திட்டங்களுக்கு 2 ஆயிரத்து 270 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நாடு முழுவதும் இது போன்ற நான்கு நகரமயமாக்கல் திட்டங்கள் அமுல் செய்யப்படவுள்ளது.

வடக்கில் கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதி இதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சியின் அறிவியல் நகர் என்ற பிரதேசத்திலே பல முக்கிய வீதிகள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன. முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி டிப்போ வரையான கிட்டத்தட்ட 9.5 கி.மீ வீதி, டுப்ளிகேசன் வீதி, கிட்டத்தட்ட 465 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றது.

இதேபோல, முறிகண்டி-அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம் ஊடாக கிளிநொச்சி, கனகபுரம் மற்றும் டிப்போச் சந்தி, வில்சன் வீதி, இரணைமடு வீதி ஊடான சுற்றுவட்டமாகச் செல்லும் 17 கி.மீ. வீதி 580 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவிருக்கின்றது நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கான குழுநிலை விவாதத்தின் போது மேற்படி தகவல்கள் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரிலுள்ள பல்வேறு இணைப்பு வீதிகளும் புனரமைக்கப்படவிருக்கின்றன. அத்தோடு, பல்கலைக்கழகத்திற்கு அருகாமையிலுள்ள பாரதி வித்தியாலயம், சிவபாத கலை (19) பக்கம் பார்க்க...



கோப்புப் படம்

## காலமானார் மண்டேலா துயரத்தில் மூழ்கியது உலகம்



தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா நேற்று முன்தினம் மரணமடைந்துவிட்டார்.

தென்னாபிரிக்காவிலும், உலகெங்கும் பல கோடிக் கணக்கானோர், நெல்சன் மண்டேலாவின் மறைவுச் செய்திகேட்டு, துயரில் ஆழ்ந்திருக்கிறார்கள். ஜோனிஸ்பாகில் அவரது இல்லத்துக்கு வெளியே ஏராளமான மக்கள் மெழுகுவர்த்திகளையும், மலர்களையும் வைத்துப் பிரார்த்தனைகளை (19) பக்கம் பார்க்க...

## கடும் காற்று வீசும் மீனவர்களுக்கு எச்சரிக்கை

காலி முதல் மட்டக்களப்பு ஊடாக யாழ்ப்பாணம் வரையான கடற்பகுதியில் அபாயகரமான காலநிலை நிலவுவதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடற்பகுதியில் மணிக்கு 80 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. ஏனைய பகுதிகளில் மணிக்கு 60 கிலோமீற்றர் என்ற வேகத்தில் காற்றின் வேகம் காணப்படும்.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். இதேவேளை, கிழக்கு, வடக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு கடலில் அனர்த்தங்கள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடற்பரப்பில் படகு கவிழ்ந்ததில் 3 மீனவர்கள் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அனர்த்தத்தில் சிக்கி காயமடைந்திருந்த மீனவர்களுக்கு முதலுதவிகள் வழங்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர், கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

அதன்பின்னர், காப்பாற்றப்பட்ட 3 மீனவர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடல் கொந்தளிப்பாக இருந்ததன் காரணமாக, இந்த மீனவர்கள் பயணித்த படகு அனர்த்தத்திற்கு உள்ளானமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, காலி தொடக்கம் மட்டக்களப்பு ஊடாக யாழ்ப்பாணம் வரையான கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும், அபாயகரமானதாகவும் மாறக்கூடிய சாத்தியம் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் அறிவிப்பையும் பொருட்படுத் (19) பக்கம் பார்க்க...

## நீதிமன்ற முன்றலில் போராட்டம் மல்லாகத்தில் நேற்று

புத்தூரில் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் அமிர்தலிங்கம் மைதிலி (வயது-27) என்பவரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவரின் வழக்கு நேற்று பகல் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட இருந்த நிலையில் மல்லாகம் நீதிமன்றத்திற்கு அருகாமையில் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்றுகூடி பதாதைகளை ஏந்திய வண்ணம் விழிப்புணர்வுப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கடந்த சில மாதங்களாக படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் பெண்களுக்கு நீதி வேண்டி குறிப்பிட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் பெண்கள் அமைப்புக்கள் இத்தகைய அமைதியான விழிப்புணர்வுப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்றைய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுமார இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் பதாதைகளை ஏந்திய வண்ணம் (19) பக்கம் பார்க்க...

## யப்பானிய தூதுவர் அகாஷி மீண்டும் வடக்கே வருகிறார்



யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி நாளை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக கொழும்பில் உள்ள யப்பான் தூதரகம் நேற்று அறிவித்துள்ளது.

கொழும்பு செல்லும் யசூசி அகாஷி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, (19) பக்கம் பார்க்க...

08

அறிமுகம்

11

ஓட்டந்துள்ளல்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், புலமையாளர் கௌரவிப்பும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி ஆ.அரசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள ஓய்வுநிலை ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் இ.இராஜேஸ்வரன், யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# "கல்வி எங்கள் மூலதனம்" செயற்றிட்டம் பாடசாலைகளுக்கு நூல்கள் கையளிப்பு

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆஸ்ரேலியா, சிட்னி பழைய மாண்வர் சங்கத்தின் 'கல்வி எங்கள் மூலதனம்' செயற்றிட்டத்தின் கீழ் வடமாகாண பாடசாலைகளுக்கு நூலகங்களுக்கான நூல்களினை கையளிக்கும் வைபவம் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது.



இச்செயற்றிட்டத்தின் முதல் கட்டமாக யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து ஆரம்ப பாடசலை, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப்பாடசாலை, திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி, கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கான நூல்கள் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழைய மாணவர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபையின் விவசாய அமைச்சர் பழைய மாணவர் பொ.ஐங்கரநேசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த செயற்றிட்டம் அவுஸ்ரேலியா வாழ் இந்துவின் மைந்தர்களின் அயராத உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் வெற்றியளித்திருப்பதாகவும், சிட்னி பழைய மாணவர் சங்கத்தினர் எமது கல்லூரி மட்டுமல்லாது வடமாகாண பாடசாலைகளின் கல்வி நிலையினையினை உயர்த்தும் நோக்குடன் செயற்படுகின்றமை பெருமையான விடயம் என கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா தனது உரையில் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இது போன்ற ஆக்கத்திறன் மிக்க செயற்பாடுகள் மூலமே இழந்த எம் இனத்தின் சுவடுகளை மீளப் பெற்று நாம் கல்வியில் முன்னேற்றமடைய முடியும் என கருத்துத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலைகளுக்கான நூல்கள் கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து நூல்களினைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகள் சார்பில் கருத்து தெரிவித்த பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் விஜயசுந்தரம், பழைய மாணவர்களின் பாடசாலை கடந்த செயற்பாடுகளை வரவேற்றதுடன், யாழ். இந்துவின் பழைய மாணவர் சங்கங்களின் உதவிகள் மென்மேலும் யாழ். பாடசாலைகளுக்கு கிடைக்க பெற செயற்படவேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தார்.

நிகழ்வில் கல்லூரி பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் என 350 மேற்பட்ட கல்வி சமூகத்தினர் கலந்துகொண்டனர். (48,114)

## செயற்குழுக் கூட்டம்

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நலன் புரிச் சங்கத்தின் இவ்வருடத்திற்கான இறுதிச் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலர் அலுவலகத்தில் மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கண்டாவளை, பூநகரி, கரைச்சி, பளை ஆகிய பிரதேச செயலப் பிரிவுகளைச் சேர்ந்த செயற்குழு உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கப் பொதுச் செயலர் திருமதி நா.யோகராணி அறிவித்துள்ளார். (112)

## பயிர்ச்செய்கை

அண்மை நாட்களாகப் பெய்து வரும் மழையினைத் தொடர்ந்து தீவகப்பகுதிகளில் விவசாயிகள் பயிர்ச்செய்கைகளில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

புகையிலை, வெங்காயம், மிளகாய், போன்ற பயிர்களை அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். (21)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை எழுதுமட்டுவாழ், மிருசுவில், உசன், கெற்பலி, விடத்தற்பளை, கைதடி, நாவற்குழி, கேரதீவு, நுணாவில், சாவகச்சேரி நகர்ப் பகுதி, மறவன்புலோ, திருநெல்வேலி, மருத்துவபீடப் பிரதேசம், தலங்காவில், ஆனைப்பந்தி, பரமேஸ்வரா, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். மின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

## கஜமுகசூர சங்காரம்

(ஆனைக்கோட்டை)

நவாலி சிந்தாமணி ஆலயத்தில் விநாயகர் விரத கஜமுக சூரசங்கார நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத்திலும் இன்று பிற்பகல் மணிக்கு விநாயக விரத சூரசங்கார நிகழ்வு இடம்பெறவுள்ளது. (104)

★ ★ ★ ★

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய கஜமுகசூர சங்காரம் இன்று இடம்பெறவுள்ளது. கடந்த 18 ஆம் திகதி விநாயகர் பெருங்கதை ஆரம்பமாகி 21 நாட்கள் நடைபெற்றுவருகின்றது.

20 ஆம் நாளான இன்று சிறப்பு மிகு பெருவிழாவாகிய கஜமுக சூர சங்காரம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு பெருங்கதை படிப்பும், அதனைத் தொடர்ந்து விசேட பூசையும் இடம்பெற்று கஜமுக சூரசங்கார விழாவும் இடம்பெறுவதோடு பிராயச் சித்த அபிஷேகம் இடம்பெற்று திருவருட்பிரசாதம் வழங்கப்படும்.

இக்கஜமுக சூர சங்காரம் ஆலய பிரதமகுரு கலாநிதி து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளார். (இ


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

### அமரர்
### சிவசாமி செம்பொற்சோதி



கடந்த 07.11.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 07.12.2013 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விலும் தொடந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**3, இலுப்பையடி**
**ஏழாலை மேற்கு**
**ஏழாலை.**

(C/3216)

**குடும்பத்தினர்.**



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1014

திகதி 05.12.2013

வெற்றி எண்கள்: 03 08 48 62 ஆங்கில எழுத்து: O

ஜக்பொட் பரிசு ரூ.1,60,00,580/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,60,00,580/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 240 | 1,000/= | ரூ. 2,40,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 472 | 1,000/= | ரூ. 4,72,000/= |
| 2 இல்க்கங்கள் பொருந்தினால் | 11306 | 60/= | ரூ. 6,78,360/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6100 | 40/= | ரூ. 2,44,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 148442 | 20/= | ரூ. 29,68,840/= |
| ஆங்கில எழுத்து | 21264 | 20/= | ரூ. 4,25,840/= |
| | | மொத்தம் ரூ. | 66,28,480/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 705323612-7-17 |
| கொழும்பு | 705332472-2-12 |
| இரத்தினபுரி | 705320827-9-09 |
| ஹம்பாந்தொட்டை | 705325540-6-26 |
| அநுராதபுரம் | 705330763-5-35 |
| கண்டி | 705322018-3-13 |
| கொழும்பு | 705334735-2-42 |
| பதுளை | 705321418-4-34 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 70,28,480/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 16,291,260/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.12.09 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 338546/7

(C/3213)


## மனித உரிமைகள் தினம்; யாழ்ப்பாணத்தில் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி கூட்டறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் ந.செல்வக்குமாரன், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## குறுக்கே பாய்ந்தது மாடு விபத்தில் சிக்கினார் குடும்பஸ்தர்

(முள்ளியவளை)

மோட்டார் சைக்கிளில் குடும்பமாகச் சென்ற வேளை மாடு குறுக்கே பாய்ந்ததால் குடும்பத் தலைவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தண்ணீரூற்று நகரப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் முள்ளியவளையைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை - நவநீதன் (வயது - 52) என்பவரே தலையில் படுகாயமடைந்தவராவார்.

இவர் உடனடியாக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டார். (125)

## ஓய்வூதிய கொடுப்பனவு

(ஆனைக்கோட்டை)

அரச ஓய்வூதியர்களுக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவு எதிர்வரும் 10 ஆம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டுக்கள் அவ்வவ் பிரதேச செயலகங்களூடாக ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினூடாக ஓய்வூதியர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் வவுச்சர்களுடன் நத்தார் புதுவருட வாழ்த்துமடல்களும் உள்ளடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வதேச மார்க்கீச குழுவின் ஏற்பாட்டில் 2014 வரவு செலவுத் திட்டம் நுகர்வோர் நோககிய பார்வை என்னும் விடயம் பற்றி கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேற்படி விடயம் பற்றி ஏ.சி. ஜோர்ஜ் உரையாற்றவுள்ளார்.

# மத்தியஸ்தர்களாக நியமனம் பெறுவோர் பாரபட்சம் காட்டாது செயற்படவேண்டும்

## முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி



(யாழ்ப்பாணம்)

மத்தியஸ்தர்களாக பதவி வகிப்பவர்கள் ஊழலற்றவர்களாக, பாரபட்சமற்றவர்களாக செயற்பட்டு இச் சமுதாயத்திற்கு சேவையாற்ற வேண்டுமென முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேசசபை மத்தியஸ்த சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது மத்தியஸ்த சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு நியமனக்கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மத்தியஸ்த சபைக்கு பின் இரண்டாவது மத்தியஸ்த சபையான கரைத்துறைப்பற்று மத்தியஸ்த சபையை ஆங்குரார்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊழல் யுத்தத்தை விட கொடியது அது அணு அணுவாக சீரழிக்கும் ஆபத்தான ஆயுதம். இலங்கையிலே 30% பெண்களை உள்வாங்கி செயற்படும் முதல் மத்தியஸ்த சபையாக, இச் சபை விளங்குகிறது. பெண்களின் பங்களிப்பு இங்கு மிக முக்கியமானது, இந்த சமுதாயத்தை பிரதிநிதித்துவப் படுத்துவர்களாக அனுபவம். தலைமைத்துவப் பண்பும் கொண்டவர்களே மத்தியஸ்தர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

யுத்தத்தினால் ஏற்பட்ட வடுக்களை சீர்ப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு அவர்களிடமுண்டு.

சிறு குற்றங்களை புரிந்தவர்கள் சிறுவர்களாக இருந்தால் அவர்களை பாரிய தண்டனைக்குட்படுத்தாது சீர்திருத்தத்திற்குட்படுத்தி எதிர்கால வாழ்வை வளமாக்கவும் 250000 இலட்சத்திற்குட்பட்ட ஆதனங்கள் தொடர்பான வழக்குகளையும், ரூபா 5000இற்கு விஞ்சாத களவுக்குற்றமாகவும் குற்றம் புரிந்தவர் 18 வயதிற்கு குறைந்தவராகவும் இருந்தால் விசாரிக்கும் நியாயாதிக்கத்தையும் மத்தியஸ்த சபை கொண்டுள்ளது என்றார். (170)

# வெற்றுக்காணிகளில் கொட்டப்படும் கோழிக்கழிவுகளால் சுகாதாரச்சீர்கேடு

(வடமராட்சி)

துன்னாலை வடக்கு சோழியாவத்தைப் பகுதியில் பராமரிப்பற்ற நிலையில் உள்ள காணிகளில் இறைச்சிக் கோழிக்கழிவுகள் கொட்டப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மந்திகையில் இருந்து சோழியாவத்தை வீதி ஊடாக துன்னாலைப் பகுதியில் உள்ள கிராமங்களுக்கும் அக்கிராமங்களிலிருந்து மந்திகைக்குச் செல்வோரும் இறைச்சிக் கோழிக் கழிவுகளின் துர்நாற்றத்தால் சிரமத்துக்குள்ளாவதுடன் தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழை காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் இக்கழிவுகளை அப்புறப்படுத்த பருத்தித்துறை பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தொடர்ந்து இவ்வாறு கழிவுகள் கொட்டப்படுவதை தடுக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (109)

# விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு விநியோகம்

(சுன்னாகம்)

குடா நாட்டு விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தால் மானிய விலையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.


30 ஆண்டுகளுக்கு முன்னர் வலிகாமம் பகுதிகளில் அமோக விளைச்சலை பெற்றுத் தந்த உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தொடர்ந்து விதைக் கிழங்கு பெற்றக்கொள்ள முடியாத நிலையில் முற்றாக கைவிடப்பட்டிருந்தது.

தற்போதைய சூழலில் அதை மீண்டும் பயிரிடும் நோக்கில் விவசாயத் திணைக்களம் அரைப்பங்கு பணத்தை மானியமாக வழங்கி 50 கிலோ உருளைக்கிழங்கை 6500 ரூபா வீதம் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

இந்த நடவடிக்கையால் வலிகாமம் பகுதியில் இவ்வருடம் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனினும் உரிய காலத்தில் பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய விவசாயிகள் வாய்ப்பை தவறவிட்டதால் ஏமாற்றம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (120)

# காரைநகர் மேற்குவீதியில் பாலம் அமைக்கும்பணி



(காரைநகர்)

காரைநகர் மேற்கு வீதியையும் கிழக்கு பிரதான வீதியையும் வயல்களினூடாக இணைக்கும் வீதியான சுப்பிரமணியம் வீதி பல காலமாக திருத்தப்படாத நிலையில் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வீதி முன்னர் குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு உதவாத வீதியாக காணப்பட்ட நிலையில் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதுடன் மேற்கு வீதியல் இருந்து இரண்டாயிரத்து 110 அடி நீளத்துக்கு பாலம் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

மேலும் இவ்வீதி உயர்த்தப்பட்ட கிரவல் இடப்பட்டு சீரான முறையில் புனரமைக்கப்பட்டு வருவதுடன் தார் இட்டு வீதி செப்பனிடப்பட்டு வருகிறது.

இதைவிட இதன் தொடர் வீதியாக உள்ள வீதிகளும் புனரமைக்கப்பட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளால் இப்பிரதேச மக்களின் போக்குவரத்து இலகுபடுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (50)

# மற்றவர்கள் கருத்துச் சொல்லும் உரிமையை மதிப்பது அடிப்படை நாகரிகம்!




நாடாளுமன்றத்தில் யார் உரையாற்றினாலும் அதைக் குழப்புவது அநாகரிகம். அநாகரிகம் மட்டுமல்ல, ஜனநாயக மறுப்பும் கூட.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சம்பந்தன் போன்றோர் பேசும்போது அரச தரப்பின் எம்பிமார் சிலர் எழுந்து அடிக்கடி கூச்சலும் குழப்பமும் போட்டு அதைக் குழப்பியிருக்கிறார்கள்.

மக்களின் பிரச்சினைகளைப் பற்றி ஒரு மக்கள் பிரதிநிதி பேசும்போது அதைச் செவிமடுக்க வேண்டியது ஏனையோரின் கடமை.

மக்களின் பிரச்சினைகளையும் அவர்களுடைய தேவைகளைப் பற்றியும் பேசுவதற்கு மக்கள் பிரதிநிதிகளை அனுமதிப்பது அடிப்படை உரிமை.

அதற்காகத்தான் பாராளுமன்றமே செயற்படுகிறது. அதற்காகத்தான் மக்கள் பிரதிநிதிகள் அங்கே உரையாற்றுகிறார்கள்.

அல்லது அறிக்கை ஒன்றைத் தயார் செய்து உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துவிடலாம். இப்படி நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்து பாராளுமன்றத்தில் குப்பை கொட்ட வேண்டியதில்லை.

பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பில் அதிகமானவர்கள் இருக்கின்றார்கள் என்பதற்காக எதையும் செய்யலாம், எப்படியும் நடந்து கொள்ளலாம் என்று நினைப்பது நல்லதல்ல.

அது ஜனநாயகத்தைக் காலின் கீழே வைத்து நசுக்குவதற்குச் சமமாகும்.

துப்பாக்கி தூக்கி அடாவடி செய்தால்தான் ஜனநாயக மறுப்பு என்று அர்த்தம் இல்லை. மற்றவர்களைப் பேசவிடாமல் தடுப்பதும் குழப்புவதும் ஜனநாயக விரோதமே.

எதிர்க்கட்சியினரை மதிக்கும் முறையில்தான் ஆளும் தரப்பின் மாண்பு தங்கியிருக்கிறது. ஜனநாயகத்தின் அடிப்படை என்பது எதிர்த்தரப்பை அணுகும் முறையில் சிறப்படைகிறது என்பது சின்னஞ்சிறுவருக்கும் தெரிந்த சங்கதி.

தவறுகள் நடப்பது வழமை. ஆனால் அதைச் சுட்டிக்காட்டாமல் இருப்பதும் அவற்றைத் திருத்தாமல் இருப்பதுமே கொடுமையிலும் கொடுமை.

தவறுகளை வளரவிட்டதால் நாங்கள் பட்ட பாடுகள் போதும்.

இனியும் அந்த மாதிரியான தவறுகளுக்கு இடமளிக்கும் தவறுகள் வேண்டாம்.

பாராளுமன்றத்தில் மட்டுமல்ல, மாகாணசபையில், பிரதேச சபைகளில், நகர சபைகளில். கிராம அபிவிருத்திச்சங்கங்களில், சனசமூக நிலையங்களில் என எங்கும் இந்த மாதிரி பெரும்பான்மையினரின் அநாகரிகம் கோலோச்சக் கூடாது.

பெரும்பான்மையாக இருக்கிறோம் என்பதற்காக தங்கள் தரப்புச் செய்வதெல்லாம் சரியென்று கருதினால், அதற்குப் பெயர் ஜனநாயகம் இல்லை.

இதேவேளை சிலர் தங்களுக்கு மேடை கிடைத்து விட்டது என்றால் எங்கே எதைப்பற்றிப் பேசுவது என்று தெரியாமல் உளறுவதும் முழங்குவதும் மற்றவர்களைத் திட்டுவதும் உண்டு.

அதை ஏற்றுக்கொள்வது முடியாததுதான்.

ஆனால், அதை நாங்கள் பொறுமையுடன் சகித்துக் கொள்வோம்.

மக்கள் அதையெல்லாம் சரியாகக் கணக்கெடுத்துக்கொள்வார்கள்.

எவரெவர் எப்படியெப்படியானவர்கள் என்று அவர்களுக்கு நன்றாகத்தெரியும்.

எல்லாவற்றையும் கணக்கெடுக்கக் கூடிய நல்ல கணினியை அவர்கள் தங்களிடம் வைத்திருக்கிறார்கள்.

சில வேளைகளில் அந்தக் கணினியை அவர்கள் தவறாகக் கையாண்டு தவறாகத் தெரிவு செய்தால் அது அவர்களையே தாக்கும்.

வரலாற்றில் அப்படியான சங்கதிகளும் சந்தர்ப்பங்களும் நடப்பதுண்டு.

போராட்டத்திற்கு எந்த விதமான பங்களிப்பையும் ஒரு காலத்திலும் செய்யாதவர்கள் எல்லாம் போர்க்களத்தில் நின்று ஆட்லறி அடிப்பதைப்போல பாராளுமன்றத்திலும் மாகாணசபையிலும் பீரங்கித் தாக்குதலை நடத்துகிறார்கள் என்பது உண்மையே.

இதைக் கேட்டுக்கொண்டிருக்க கடினமாகத்தானிருக்கும்.

அரசியலில் மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யாமல் சும்மா பில்டப் காட்டிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுதான்.

ஆனால் என்ன செய்வது?

போர்க்களம் மாதிரி இங்கே எல்லாவற்றுக்கும் மறுத்தான் கொடுக்க முடியாது.

அதற்காக எதிர்த்தரப்பில் நின்று கொண்டு, எதையும் பேசுவேன், அப்படிப் பேசுவதற்கு ஜனநாயகம் இருக்கிறது, பாராளுமன்றச்சிறப்புரிமை இருக்கிறது என்று வீண்கதை பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனாலும் ஜனாநாயகம் என்பது சகிப்புத்தன்மையில்தானே வேர்விடுகிறது. முதலில் ஜனநாயகத்தைப் பாதுகாப்போம். அதைப் பலப்படுத்துவோம். அது வழிகாட்டும்.

எனவே, பொறுத்தார் அரசாழ்வார். பொங்கினார் காடுறைவார் என்பதை நம்புவோம்.

இதுவும் ஒரு ஜனநாயக மொழிதான்.

இந்த ஜனநாயக மொழியை நம்பாமல் பொங்கியவர்கள் கண்காணச் சரிந்ததுதானே மிச்சம்!

நாங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.

மக்கள் தங்களிடம் இருக்கின்ற 'சரிபிழையைக் கண்டு பிடிக்கும் கணினி'யை சரியாகக் கையாள்வதற்கு உதவுவோம். அல்லது அந்தக் கணினியை எப்படிச் சரியாக்க கையாள்வது என்பதைக் காட்டிக் கொடுப்போம்.

அவ்வளவும் போதும். வரலாறு நல்ல இடத்தை நோக்கி நகரும்.

காரியங்கள் கடினமாகும் போதெல்லாம் நாம் அமைதியாகவும், மௌனமாகவும் இருக்க வேண்டும். - ஸ்ரீ அன்னை.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வறட்டுப் பிடிவாதங்களை விடுவோம்!

பிரபலமான ஒரு குட்டிக்கதை இது. ஒரு நதியில் இரு மரக் குற்றிகள் விழுகின்றன. அதில் ஒன்று குறுக்காகவும் மற்றது நேர்கோட்டிலும் மிதக்கின்றன. நேர்கோட்டில் விழுந்த குற்றி நதிக்கு தான்தான் பாதை காட்டுவதாக ஆனந்தத்தில் நதியுடன் இணைந்து பயணித்தது. குறுக்கே விழுந்த குற்றி தான் நதியின் ஓட்டத்தைத் தடைப்படுத்தப் போவதாகக் கடைசி வரை சாகசங்கள் செய்து பார்த்தது. இறுதியில் இரு குற்றிகளுமே பெரும் பள்ளத்தில் போய் விழுந்தன. நதிக்கு இந்தக் குற்றிகள் குறித்து ஒன்றுமே தெரியாது.

இந்தக் கதை நமக்குச் சொல்ல வருவது வாழ்வின் நிஜத்தை. சிலர் வாழ்க்கையை வலிந்து கஷ்டப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் வாழ்வது தவிர வாழ்க்கையில் வேறென்ன பெரிதாகி விடப் போகிறது?

இன்றிருக்கும் நமது எதிர்ப்பான, பகையான, வெறுப்பான மனநிலைகளுடனேயே வாழ்ந்துவிட்டுப் போவது ஒருசிலருக்கு வேண்டுமானால் திருப்தி தருவதாக இருக்கலாம். பெரும்பாலான மக்களுக்கு அதனால் என்ன கிடைத்துவிடப் போகிறது?

பெரும்பாலான மக்களின் துயரைக் கவனத்தில் கொண்டு, அவர்களை வாழச் செய்யும் விதமாக, அவர்களது வாழ்வுக்கு வேண்டியவற்றைப் பெற்றுத்தரும் விதமாக நம்மால் முடிந்ததைச் செய்ய யோசிப்பதே இன்று மனிதருக்கான கடமையாக இருக்க முடியும்.

நடைமுறைக்குப் பொருந்தாத உணர்ச்சிகரமான கனவுகளைக் காட்டி அவர்களை மேலும் மேலும் கஷ்டப்படத் தூண்டுவது இன்றைய யதார்த்தமாகாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட காலம் வாழ்வைக் கொடுக்கும் நெல்லிக்கனியைத் தானே உண்ணாது ஔவையாருக்குக் கொடுத்து அவரை வாழச் செய்த அதிகமான் நெடுமானஞ்சியும், போரையும் பகையையும் பற்றி யோசித்துக் கொண்டிருந்த மன்னர்களிடம் போய் விவசாயிகளின் துயரையும் சாதாரண மக்களின் அவதியையும் துணிவோடு எடுத்துச் சொன்ன வெள்ளைக்குடி நாகனார் போன்றவர்களும் இருந்திருக்கிறார்கள்.

“உனது வெண்கொற்றக் குடை வெயிலை மறைப்பதற்கு உள்ளது அல்ல, வருத்தமுறும் குடிமக்களுக்கு ஆதரவு காட்டுவதற்கேயாகும். அவர்களது வாழ்வுப் பாடுகளை உணர்ந்து உன் குடியைக் காப்பாய். அவ்வாறு செய்தால் பகைவரும் உன் காலில் பணிந்து நிற்பர்” என்று சமுதாய உணர்வோடும், எளிய மக்கள்பால் கரிசனையோடும் பாடியுள்ளனர்.

“உண்டாலம்ம” என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல், பிறர்க்கென வாழும் பேராண்மையாளர்களால்தான் இவ்வுலகம் நிலைபெற்று வாழ்வதாய்ச் சொல்கிறது. இம்மையிலும் மறுமையிலும் பலன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அறம் செய்வதல்ல; இலாபத்தை எதிர்பாராது சமூகத்திற்கு உதவுவதே உயர்ந்த குணம் என்பதைச் சொல்கின்றனர் சங்கக் கவிஞர்கள்.

நம் வாழ்க்கையையும், அதேசமயம் மற்றவர்களின் வாழ்க்கையையும் நேசிக்கும் மனப்பாங்குதான் நம்மை மனிதர்களாக உயர்த்தும். இந்த வாழ்க்கை நமக்கு முக்கியம். இதை இழந்து விட்டு யார் யாருடையதோ ரோசங்களுக்காக நம்மை வதைகளோடு காத்திருக்கச் சொல்கிறவர்களை நாம் நம்ப வேண்டாம்.

நம்மை நாமே வலிந்து அவலப்படுத்திக் கொள்கிற வறட்டுப் பிடிவாதங்களுக்கு விடைகொடுத்தால்தான் மகிழ்ச்சியான விடுதலையுணர்வும், அனைவருக்குமான வாழ்வும் சாத்தியமாகும் என்பதைப் புரிந்து கொள்வோம்.

- ஆசிரியர்

# மாகாணங்களின் தற்போதைய அதிகாரங்களே தனிநாடு உருவாக வழிவகுக்கும்

## ஜாதிக ஹெல உறுமய போர்க்கொடி

தற்பொழுதுள்ள அதிகாரங்களுடன் மாகாண சபைகள் இயங்கினால் தனி நாடு உருவாகும் ஆபத்துள்ளது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்டுள்ள அந்தக கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ரன்பத்வில விமலரட்ன தேரர் தெரிவிக்கையில்,

முஸ்லிம் மக்களை வடக்கில் மீள்குடியேற்ற ஆணைக் குழுவை நியமித்துள்ள விக்னேஸ்வரனுக்கு சிங்கள மக்களை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்பது மறந்து விட்டது.

அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும பான்மை பலம் இருக்கும் சந்தர்ப்பத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். போர் வெற்றிக்குப் பிறகு வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் தமிழர்களும், முஸ்லிம்களும் மட்டுமே மீள்குடியேற்றப்பட்டனர்.

வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த சிங்கள மக்களை மீள்குடியேற்ற வேண்டும் என்று ஜனாதிபதி, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தோம். எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. போருக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் 21 ஆயிரம் சிங்களவர்கள் வாழ்ந்தனர். அவர்களிடம் காணி உறுதிகள் இருந்தன. எவ்வாறாயினும் அண்மைய காலத்தில் இடம்பெயர்ந்த சிங்களக் குடும்பங்களில் 150 குடும்பங்கள் சுய விருப்பின் பேரில் நாவற்குழியில் குடியேறினர்.

இவர்களுக்கு அரசாங்கம் நிவாரணங்களை வழங்கவில்லை. இதனால் 150 குடும்பங்களில் தற்பொழுது 10 குடும்பங்களே அங்கு உள்ளன.

வடக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இந்த குடும்பங்களை அச்சுறுத்துகின்றனர்.

நாவற்குழியில் உள்ள புத்தர் சிலை மீது குண்டு வீசி அழிக்கப்பட்டது. அங்கு வாழும் சிங்களக் குடும்பங்களுக்கு தமிழ் அதிகாரிகள் உதவுவதில்லை. அதேவேளை காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிட்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு நாங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம். அதற்கு செவி கொடுக்கவில்லை என்றார்.

## தியகமவில் உதயமாகின்றது தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

தொழில்நுட்ப கற்கைநெறிக்காக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்காக, ஹோமாகம தியகமப் பகுதியில் பல்கலைக்கழகமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு குறிப்பிடுகின்றது.

நவீன தொழில்நுட்ப பிரிவுகளுடன் கூடிய இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஆயிரத்து 800 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் கல்வி நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் கீர்த்தி மாவல்லகே தெரிவித்தார்.

இதன் நிர்மாணப் பணிகளை 2015 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு ஏனைய பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் இதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்களின் மனங்களை பாழ்படுத்த நடவடிக்கை

### ஐக்கிய தேசியக் கட்சி சாடல்

சூதாட்டம், விபசார தொழில் போன்றவற்றினால் மக்களின் மனங்களை பாழ்படுத்தும் நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

தர்மச் சக்கரமா அல்லது கசினோ சக்கரமா என்ற இரண்டில் ஒன்றை அரசாங்கம் தெரிவு செய்ய வேண்டும் என் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கசினோவுக்கு எதிரான கருத்தரங்கில் பேசும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சோழர்கள், கலிங்க மாகன், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கை மக்களுக்கு செய்திராத குற்றத்தை தற்போதைய அரசாங்கம் செய்துள்ளது.

கட்டான சிட்டி என்ற பெயரில் 5 கசினோ சூதாட்ட நிலையங்களையும், கட்டுநாயக்க பிரதேசத்தில் ஒரு கசினோ சூதாட்ட நிலையத்தையும் ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது. இந்தப் பிரதேசம் குட்டிரோம் என அழைக்கப்படுகிறது. இதனைக் கசினோ நகரமாக மாற்ற அரசாங்கம் முயற்சித்துள்ளது.

அதிவேக வீதி ஒன்றை நிர்மானித்து முடித்ததும் அதன் முடிவில் கசினோ சூதாட்ட நிலையத்தை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது.

கசினோ நிலையம் என்பது சீட்டாட்டம் நடத்தும் இடம் போன்ற சூதாட்ட நிலையம் அல்ல என்றார்.

## பாடப்புத்தகங்களிலுள்ள விடயங்கள் இறுவட்டுக்களாக வெளியாகவுள்ளது

(கொழும்பு)

பாடப் புத்தகங்களில் காணப்படும் சில விடயங்களை மாணவர்களுக்கு தெளிவூட்டுவதற்கு, பாடநெறி தொடர்பான 'செயற்றிட்டங்கள் அடங்கிய இறுவட்டுக்களை வெளியிடுவதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

2015 ஆம் ஆண்டுமுதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக, 6 ஆம் தரத்திற்கான விஞ்ஞான புத்தகத்திற்கு இறுவட்டு வெளியிடப்படுமென அவர் கூறினார்.

பாடநெறி தொடர்பான செயற்பாடுகளின் படங்கள், வீடியோக்கள் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் இந்த இறுவட்டு வெளியிடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பல்வேறு கட்டங்களின் கீழ், மேலும் பல பாடநெறிகளுக்கும் இவ்வாறான இறுவட்டுக்களை வெளியிட கல்வி வெளியீட்டுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

## இராஜதந்திர விதிமுறைகளை இந்தியப் பிரதமரின் வருகை மீறக்கூடாது

### ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயத்தை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கவில்லை. அவர் யாழ்ப்பாணம் செல்வதையும் எதிர்க்கவில்லை. எனினும் அவரது வரவு இராஜதந்திர விதிமுறைகளை மீறக்கூடாது என்பதே எமது விருப்பம் என ஜோன் அமரதுங்க எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடிய போது எதிர்க்கட்சி பிரதம கொறடா சிறப்புரிமை மீறல் பிரச்சினையொன்றைச் சமர்ப்பித்து பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயம் தொடர்பில் அண்மையில் நான் இந்தச் சபையில் முன்வைத்த கருத்தை ஆங்கிலப் பத்திரிகையொன்று பிரதான தலைப்பாக இந்தியப் பிரதமரின் வருகையை ஐ.தே.கட்சி எதிர்க்கிறது எனப் பிரசுரித்திருந்தது.

இந்தியப் பிரதமரின் விஜயத்தை ஐ.தே.கட்சி எதிர்க்கவில்லை. வடமாகாண முதலமைச்ச ரின் அழைப்பையேற்று அவர் இலங்கை வரலாம். யாழ்ப்பாணம் செல்லலாம். எமக்கு பிரச்சினையில்லை.

ஆனால் இந்தியப் பிரதமர் மன்மோகனின் இலங்கை விஜயத் துக்குரிய இராஜதந்திர ஒழுங்கு விதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதையே கூறினேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**நாட்டின் அனைத்துப் பிரதேசங்களதும் அபிவிருத்திக்கான அரசின் கட்டமைப்புகளான மாகாண, பிரதேச சபைகளுக்காக தேர்தலில் போட்டியிடும் தமிழ் கூட்டமைப்பினர், மறுபுறம் இதற்கான அரசை மறுதலிக்கும் நிலைப்பாட்டை தமக்குள் கொண்டிருக்கின்றனர். தேர்தல் வெற்றிக்காக மட்டும்தான் இந்த நடைமுறையை கொண்டிருக்கிறார்கள் என்றாலும் தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தமிழ் மக்களின் காதுகளில் ஓதுகின்ற விடயம் தான் தேர்தலுக்குப்பிறகு இவர்களுக்கு எதிர்வினையாக மாறிவிடுகின்றது. இதில் பிரதானமானது, இந்தத் தேர்தலில் தமிழ்மக்களின் ஒற்றுமைப் பெரும்பலத்தைக் காட்டி வெற்றிபெற்றவுடன் அரசு கவிழ்ந்துவிடும் என்பதுபோன்ற பொய்யான நம்பிக்கைகளை மக்களுக்கு ஏற்படுத்தும் பரப்புரையாகும். இதனை நம்புமாறு கூட்டமைப்பினர் கூறிக்கொண்டிருப்பதால் அரசுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று சும்மா ஒரு பேச்சுக்காகக் கூட யதார்த்தத்தைச் சொல்லமுடியாத நிலையிலிருக்கிறார்கள். நாங்கள் வென்றால் மக்களுக்கு இதனைப் பெற்றுத்தருவோம் என எதனையும் கூற துணிவில்லாத நிலைதான், தேர்தலுக்குப்பிறகு மக்களை அரசுக்கெதிராக திருப்பும் நிர்ப்பந்தத்துக்கு இவர்களை ஆளாக்குகிறது.**




# தமிழ்க் கூட்டமைப்பினது பிரதேச சபைகளின் எதிர்காலம்

**சாலையூரான்**

தமிழ்ச் சூழலில் அண்மைய மாவீரர் தின நிகழ்வுகளை அடுத்து குடாநாட்டிலுள்ள பிரதேச சபைகளில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களின் வதிவிடங்கள் இப்போது இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றன.

சபைக் கூட்டங்களில் எதிர்த்தரப்புடனும் கூடவே தமது ஆளும்தரப்பு உறுப்பினர்களுடனும் முரண்பட்டுக்கொண்டு எவ்வித அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியாத நிலையில் இப்போது இனந்தெரியாதோரின் தாக்குதலும் சேர்ந்து தமிழ் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்களை மிகவும் இக்கட்டான நிலைக்குள் தள்ளியிருக்கிறது.

இவர்களால் தமது சபைகளுக்கு தேவையான ஆளணி வசதியை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. தேவையான அபிவிருத்தி நிதியை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியவில்லை. தம்மை கேள்வி கேட்கும் உள்ளூராட்சி அதிகாரிகளை இடம்மாற்ற முடியவில்லை. தாம் விரும்பும் அதிகாரிகளை பணிக்காக அமர்த்திக்கொள்வதற்காக மாகாண முதல்வரிடம் போய் மண்டியிட்டு நிற்க வேண்டிய நிலைக்கும் பிரதேசசபைகள் தள்ளிவிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக செயற்படுவதாக கூறி ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து தமது கட்சியின் தவிசாளருக்கெதிராக செயற்படும் நிலைமைகளும் பிந்தியதாக உருவாகி இருக்கின்றன.

பெரும்பாலான பிரதேச சபைகளில் கூட்டங்களை நடத்துவதற்கும் நிர்வாகத்தை சீராக முன்னெடுப்பதற்கும் பிரதேச செயலாளரின் எந்த ஒத்துழைப்பையுமே பெற முடியாத நிலையில் பதிலுக்கு தீராப்பகையை வளர்த்துக்கொண்டு தமது அனைத்து பணிகளையுமே முடக்கிக் கொள்ளுமளவுக்கு கூட்டமைப்பின் பிரதேச சபைகள் நிலைகுலைந்து விட்டன.

இலங்கை உள்ளூராட்சி நிர்வாகத்தின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, கூட்டமைப்பினர் கையேற்றிருக்கும் இந்த பிரதேச சபைகள் நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பதால் இதற்கான உண்மையான காரணத்தை ஆராய்வது அவசிய மாகிறது.

இந்த நிலைக்கான முதலாவது அடிப்படைக் காரணம், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களதும் அபிவிருத்திக்கான அரசின் .கட்டமைப்புகளான மாகாண, பிரதேச சபைகளுக்காக தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கூட்டமைப்பினர், மறுபுறம் இதற்கான அரசை மறுதலிக்கும் நிலைப்பாட்டை தமக்குள் கொண்டிருப்பதாகும்.

தேர்தல் வெற்றிக்காக மட்டும் தான் இந்த நடைமுறையை கொண்டிருக்கிறார்கள் என்றாலும் தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தமிழ் மக்களின் காதுகளில் ஓதுகின்ற விடயம் தான் தேர்தலுக்குப்பிறகு இவர்களுக்கு எதிர்வினையாக மாறிவிடுகின்றது.

இதில் பிரதானமானது, இந்தத் தேர்தலில் தமிழ்மக்களின் ஒற்றுமைப் பெரும்பலத்தைக் காட்டி வெற்றிபெற்றவுடன் அரசு கவிழ்ந்துவிடும் என்பதுபோன்ற பொய்யான நம்பிக்கைகளை மக்களுக்கு ஏற்படுத்தும் பரப்புரையாகும். இதனை நம்புமாறு கூட்டமைப்பினர் கூறிக்கொண்டிருப்பதால் அரசுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று சும்மா ஒரு பேச்சுக்காகக் கூட யதார்த்தத்தைச் சொல்லமுடியாத நிலையிலிருக்கிறார்கள்.

நாங்கள் வென்றால் மக்களுக்கு இதனைப் பெற்றுத்தருவோம் என எதனையும் கூற துணிவில்லாத நிலைதான், தேர்தலுக்குப்பிறகு மக்களை அரசுக்கெதிராக திருப்பும் நிர்ப்பந்தத்துக்கு இவர்களை ஆளாக்குகிறது.

மறுபுறத்தில் இவர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் அரசுக்கெதிரானதாக முன்வைக்கப்பட்டு, நடைமுறைச் சாத்தியமில்லாத தீர்வுகள் திட்டங்களுக்காக மக்கள் வாக்களிக்க வைக்கப்பட்டிருப்பதால் இந்த சபைகளுக்கு எதனடிப்படையில் ஏன் நிதி ஒதுக்க வேண்டும் என அரசும் தனக்குள் கேட்டுக்கொள்வது தவிர்க்கமுடியாததாகிறது.

இந்த நிலையில் உள்ளூராட்சி சபைகளில் எதிர்த்தரப்பில் இருக்கும் உறுப்பினர்கள், உங்களுக்கு வாக்களித்த மக்களுக்காக ஏன் எதுவும் செய்யாதிருக்கிறீர்கள் எனக் கேட்கும் போது, தங்களது இயலாமையை உணர்ந்து பதற்றத்திற்குள்ளாகிறார்கள். இவ்வாறான கேள்விகளுக்காக அரசை இன்னும் மோசமானதாக அம்பலப்படுத்த வேண்டும் என்ற ஆவேசத்திற்கும் அரசுக்கெதிரான நேர்விரோத நிலைப்பாட்டுக்கும்தான் இவர்கள் தள்ளப்படுகிறார்கள்.

இந்த விரோத உணர்வு தம்வசமுள்ள பிரதேச சபைகளின் பௌதீக வளங்களை தமிழ்க் கூட்டமைப்பினர் துஷ்பிரயோகம் செய்வதில் வெளிப்பட்டு விடுகிறது. திறந்த கேள்வி கோராமல் சபையின் அபிவிருத்தி வேலைகளை தாம் விரும்பிய ஒருவருக்கு வழங்க முற்படுவது, சபைக்கு சொந்தமான அசையும் அசையாச் சொத்துக்களை சபை அனுமதி இன்றியே விற்பனை செய்வது, சட்டத்துக்குப் புறம்பாக வரி அறவிடுவது, வெளியே சமூகப்பணி நிறுவனங்களிடம் பணம் அறவிடுவது உட்பட சபையின் மொத்த வளங்களையுமே துஷ்பிரயோகம் செய்யும் நிலை வருகிறது. அதையெல்லாம் அரசுக்கு எதிரான நடவடிக்கையாக வெளிப்படுத்துவதன் மூலம் தமது மோசடி வேலைகளுக்கு மக்களிடம் அங்கீகாரம் பெற முனைவதில் இவர்களின் உள் நோக்கங்கள் அம்பலமாகிவிடுகின்றன்.

சபை நிர்வாகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் இவர்களின் நேர்விரோதிகளாக்கப்பட்டிருப்பது அடுத்த விவகாரம். இந்த அதிகாரிகள் அரசின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதும் தாம் விரும்பும் சட்டத்துக்கு புறம்பான குறுக்கு வழிகளுக்கு இந்த அதிகாரிகள் உடன்படாதிருப்பதும் இவர்களுக்கு தீராத ஆத்திரமாக இருக்கிறது.

அரசுக்கெதிரான நீடித்த போர்ச் சூழலில் அரசின் வளங்களை ஆதனங்களை சூறையாடுவது வீரதீர செயலாக கருதிக்கொள்ளும் இந்த மரபு இப்போது அதிகாரத்துக்கு வந்து விட்ட நிலையில் தாம்விரும்பும் செயல்களுக்கு சட்டம் ஒழுங்கு முறைகளைக் கூறி இந்த அதிகாரிகள் தடுப்பது அவர்களுக்கு பெருத்த அவமானமாக இருக்கிறது.

இந்த நிலை, தம்மிடமுள்ள முழு அதிகாரங்களையும் பயன்படுத்தி நடப்பிலுள்ள அரசநிர்வாகத்தை எப்படி ஸ்தம்பிக்கச் செய்யலாம் என எண்ணி அதற்காக தமது சக உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு காரியத்தில் இறங்க இவர்களை நிர்ப்பந்திக்கிறது.

அண்மையில் நடைபெற்ற வடமாகண சபைத் தேர்தலுக்குப்பிறகு அரசுக்கெதிரான மாகாண சபையின் நடவடிக்கைகளுக்கு இணையாக இந்த பிரதேச சபைகள் செயற் பட முற்பட்டதிலிருந்து இவர்களின் உள்நோக்கங்கள் அம்பலமாகியிருக்கின்றன.

தமது கட்சியின் சபை உறுப்பினர்களையும் சபையின் வளங்களையும் துஷ்பிரயோகம் செய்வதில் நிருபணமாகியிருக்கும் இந்த போக்கு இறுதியாக மாவீரர் தினத்தை தமது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்த முற்பட்டதில் மேலும் வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

பிந்தியதாக கொழும்பு பொதுநலவாய மாநாட்டையொட்டி உலகத் தலைவர்களின் முன் இலங்கைஅரசை அம்பலப்படுத்த வடக்கு மாகாண சபையுடன் இணைந்து இந்த பிரதேச சபையின் தவிசாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளிலிருந்து நடப்பிலுள்ள அரசை மறுதலிப்பது மேலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அரச தலைவர் என்றவகையில் ஜனாதிபதி அளித்த வடக்கின் அபிவிருத்திக்கான இணைத்தலைவர் பதவியை வடமாகாண முதலமைச்சர் நிர்கரித்ததன் மூலம் அவரும் இந்த நாட்டின் அரசை மறுதலித்துச் செய்யும் அரசியலுக்குள் இறங்கிவிட்டதையே உறுதிப்படுத்தியிருக்கிறார்.

கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் தமது பிரதேச சபைகளின் வளங்களை அரசுக்கெதிராக பயன்படுத்தியதில் தம்மைத் தாமே அம்பலப்படுத்திக் கொண்டதன் பின்னர் இனி இந்த பிரதேச சபைகளை எவ்வாறு மக்களின் நலனுக்காக வழிநடத்திச்செல்லலாம் என்பதை தமிழ் கூட்டமைப்பினர்தான் தெளிவுபடுத்த வேண்டும்.

# காயத்தை காட்டி பிச்சை எடுத்து அரசியல் நடாத்தும் கூட்டமைப்பு



(கொழும்பு)

பிச்சைக்காரர்கள் தனது காலில் ஏற்பட்ட காயத்தை ஆற்றிகொள்ளாமல் அதனை வைத்து பிச்சையெடுப்பதை போன்றே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்காது அரசியல் பிழைப்பு நடாத்துகின்றது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அன்றும் இன்றும் என்றும் ஒரே நிலைப்பாடுதான். அதில் எவ்வித மாற்றமும் இல்லை. 13 ஆவது திருத்தம் தொடர்பில் சிறந்தவொரு முடிவை எடுப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு சிறந்தவொரு இடமாகும்.

ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுத்து தேசியப் பிரச்சினைக்கு தீர்வொன்றை பெறுவதாக இல்லை. காரணம் அவ்வாறு அரசியல் தீர்வொன்றை பெற்றுவிட்டால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் அரசியல் செய்ய முடியாமல் போய்விடும்.

13 பிளஸ் அல்லது மைனஸ் என எதுவாக இருந்தாலும் இது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தான் பேசித் தீர்க்கவேண்டும். அதனை விடுத்து வெளியிலிருந்து கொண்டு விமர்சனம் செய்யக்கூடாது.

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் விரும்புவது இல்லை. அவ்வாறு பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டால் அவர்களால் அரசியல் செய்ய முடியாமல் போய்விடும்.

குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் காலங்களில் இப்பிரச்சினைகளை வைத்தே தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதோடு விமர்சனங்களையும் முன்வைப்பர். பின்னர் தேர்தலில் வெற்றிபெறறு ஐந்து வருடங்களுக்கு வெளிநாடுகளில் சுற்றித்திரிந்து குறைகூறி வந்து மீண்டும் தேர்தலுக்கு ஆயத்தமாவார்கள்.

இதுவே இவர்களுடைய அரசியல். பிரச்சினைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு அரசியல் செய்வதால் தான் அவர்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வருவது இல்லை என்றார்.

# "மகளிர் மட்டும்" பேருந்தை இலங்கைப் பெண்கள் விரும்பவில்லை

## அமைச்சர் குமார வெல்கம

(கொழும்பு)


"மகளிர் மட்டும்" பேருந்தில் பயணம் செய்ய இலங்கைப் பெண்கள் விரும்புவதில்லை. எனவே இலங்கை பேருந்து அறிமுகம் செய்யும் முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளன என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் வெல்கம சில பெண்கள் "மகளிர் மட்டும்" பேருந்தில் பயணிக்க விரும்புவதில்லை என தனக்கு நேரில் தெரிவித்ததாக நாடாளுமன்றில் கூறினார்.

அண்மையில் நான் ரயிலில் பயணித்தபோது பெண்களுக்கென தனியாக பெட்டிகளை ஒதுக்க வேண்டுமா எனக் கேட்டபோது அவர்கள் தாம் தனித்து பயணிக்க விருப்பவில்லை எனக் கூறினர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஆகையால் "மகளிர் மட்டும்" ரயில் பெட்டித்திட்டத்தையும் கைவிட்டு விட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

# வரிக்குறைப்பை அடுத்து தங்கத்தின் விலை வீழ்ச்சி

## தங்க ஆபரண அதிகார சபை



(கொழும்பு)

சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

தங்கத்துக்கு விதிக்கப்பட்டிருந்த வரி இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டதையடுத்து, விலையும் குறைவடைந்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

வெளிநாட்டு சந்தைகளிலும் தங்கத்தின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் கொள்வனவின் போது தரமான தங்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாக இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.



சட்டமா அதிபர் திணைக்களத்தின் சொலிஸ்டர் ஜெனரலான ஜனாதிபதி சட்டத்தரணி புவனெக்க அலுவிகாரே நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்துகொண்டார்.

# ஒருவருக்கு 80 வயதிலும் 20 பற்கள் இருக்கவேண்டும்

(கொழும்பு)




பிள்ளைகளின் பல் சுகாதாரம் குறித்து விசேட வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு 80 வயதாகும் போது 20 பற்களாவது இருக்க வேண்டும் என்பது சர்வதேச தரம் என சுகாதார அமைசசு குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இலங்கையில் ஒருவருக்கு 70 வயதாகும் போது ஒரு பல் கூட இருப்பதில்லை. எனவே சிறு வயதில் இருந்தே பல் சுகாதாரம் குறித்து கவனம் செலுத்தும் வகையில் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பான கணிப்பீடு ஒன்றை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென அமைச்சு மேலும் கூறியுள்ளது.

# தானாக ஓடிய ரயிலில் இயந்திரக் கோளாறு இல்லை

## விசாரணையில் தெரிவிப்பு



(கொழும்பு)

மாளிகாவத்தை ரயில் நிலையத்திலிருந்து இரத்மலானை வரை தானாகவே இயங்கிய ரயிலின் இயந்திரத்தில் எவ்வித கோளாறும் இல்லை என்று இது தொடர்பில் விசாரணை நடத்திய மூவரடங்கிய குழு அறிவித்துள்ளது.


ரயில் சாரதி இல்லாமல் ரயில் இயந்திரமொன்று தானாகவே பயணித்த சம்பவமொனறு நேற்றுமுன்தினம் அதி காலை 1.45 மணியளவில் இடம்பெற்றது.

மாளிகாவத்தையில் ரயில்கள் நிறுத்திவைக்கப்படும் இடத்திலிருந்து தானாகவே இயங்கி பயணித்த மேற்படி ரயில், கல்கிஸைக்கும் இரத்மலானைக்கும் இடையில் ரயில்வே அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கையால் நிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த ரயில் சாரதியும் அவரது உதவியாளரும் உடனடியாகப் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ரயில்வே திணைக்களத்தினால் தொழில்நுட்பக் குழுவைச் சேர்ந்த மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இக்குழுவே தானாகவே இயங்கிய ரயிலின் இயந்திரத்தில் எவ்வித கோளாறும் இல்லை என்று தங்களது விசாரணையின பின்னர் அறிவித்துள்ளனர்.

# பிலிப்பைன்ஸில் பாதிப்புற்றோருக்கு உதவ இலங்கை சுகாதாரக் குழு பயணம்




பிலிப்பைன்ஸில் அண்மையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார வசதிகள் வழங்கும் நோக்கில் இலங்கையிலிருந்து வைத்தியக் குழுவொன்று பிலிப்பைன்ஸ் செல்லவுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் படியே இந்த வைத்தியக் குழு அங்கு செல்லவுள்ளது.

நேற்று முன்தினம் காலை அக் குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினர்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மனைவி தீ மூட்டி கொலை கணவனுக்கு மரணதண்டனை



மனைவிக்கு தீ மூட்டி கொலை செய்ததாக குற்றம் சாடடப்பட்ட கணவனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

கொத்தட்டுவ வாசியான அநுர லக்ஷ்மன் சில்வா 2004 ஆம் ஆண்டு யூலை 7 ஆம் திகதியன்று தனது மனைவிக்கு வேண்டுமென்றே தீ மூட்டி கொலைசெய்தாரென கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சந்தேகநபர் மீது சுமத்தப் பட்டிருந்த குற்றம் நிருபிக்கப்பட்டதையடுத்து நீதிபதி குமுதினி விக்ரமசிங்க அவருக்கு நேற்று முன்தினம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் மாவட்டம் 306 BI இன் ஆளுநர் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும், கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம்.

# பூநகரி மகாவித்தியாலயம் கல்லூரியாக தரம் உயர்வு

(முழங்காவில்)

பூநகரி கோட்டத்தில் இயங்கும் 22 பாடசாலைகளில் தாய்ப் பாடசாலையாக விளங்கியதும் 65 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட பூநகரி மகாவித்தியாலயம் கடந்த மாதம் தொடக்கம் பூநகரி மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளதாக பாடசாலை அதிபர் ஆர்.பாலச்சந்திரன் அறிவித் துள்ளார்.

பாடசாலையின் முத்தமிழ் விழா நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இத்தகவலை தொவித்துள்ளார்.

அவர் தெடர்ந்து தெரிவிக்கையில், இப்பாடசாலையை மத்திய கல்லூரியாக உயர்த்த வேண்டும் என வடபகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், பாடசாலை சமூகம் ஆகியோர் விடுத்த கோரிக்கையை அடுத்தே இப்பெறுபேறு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். இப்பாடசாலையில் க.பொ.த. உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், தொழிநுட் பம் போன்ற பாடப்பிரிவுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (112)

# வெங்காயம் திருட்டு

ஆவரங்கால் மேற்கு புத்தூர் நவக்கிரிப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை 5 அந்தர் வெங்காயம் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வெங்காயச் செய்கை பண்ணப்படும் இக் காலத்தில் இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்துடன் வெங்காயத்தின் விலையும் தற்போது அதிகரித்துக் காணப்படுவதால் தாம் பாரிய நட்டத்தை இதனால் எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாது தடுப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# தீவக கல்விவலயத்தின் கல்விக் கண்காட்சி

(வேலணை)

தீவகக் கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட கல்விக்கண்க் காட்சியும், உடுபுடவை தையல் கண்காட்சியும் கடந்த புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் புங்குடுதீவில் உள்ள வட இலங்கை சர்வோதய வளாகத்தில் அமைந் துள்ள மண்டபத்தில் நடைபெற்றது. தீவக வலய கல்விப் பணிப்பாளர் த.ஜோன் குயின்ரஸ் தலைமையில் நடைபெற்றகண்காட்சியினை வடமாகாண கல்வித்திணைக்கள முறைசாராப்பிரிவு உதவி கல்விப்பணிப்பாளர் என் கையிலைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியினை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவகக்கல்விவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரானிஸ்லாஸ் வடமாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப்பிரிவு) இராசலிங்கம், தீவக் கல்வி வலய முறைசார கல்விப்பிரிவைச் சேர்ந்த எஸ்.அரூரன் ஆகியோரும் கௌரவிருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தீவகப் பிரிவின் செயலாளரும் வட இலங்கை சர்வோதய நிலையத்தின் பொறுப்பாளருமான செல்வி யாமுனாதேவி பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

# கைச்சாத்திடப்பட்டது புரிந்துணர்வு ஒப்பந்தம்

(திருநெல்வேலி)

யாழ்.பல்கலைக்கழக கணக்கீட்டுத் துறைக்கும், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிலையத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் நண்பகல் யாழ்.பல்கலைக்கழகத்தில் கைச்சாத்திடப் பட்டது.

கல்வி சார்ந்ததும், தொழிற்தகமை சார்ந்ததுமான இந்த இரு நிறுவனங்களும் தமது கற்கை நெறி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றைத் தமது கல்விசார் விரிவுரையாளர்களை வளவாளர்களாகப் பாவித்துச் செயற்படுவதற்கான வாய்ப்பு இதன் மூலம் ஏற்பட்டுள்ளதுடன் மாணவர்களின் திறன் அதிகரிப்புக்கும் உதவுவதாக அமையும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்பல் கலைக்கழகக் உபவேந்தர் வசந்தி அரசரட்ணம், இலங் கைப்பட்டயக்கணக்காளர் சங்கத்தலைவர் சுஜீவா ராஜ பக்ஷ, பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தகத் துறைத் தலைவர் ரீ.வேல்நம்பி, ஆகி யோர் உரையாற்றினர்.

வரவேற்புரையை கணக்கியல் துறைத்தலைவர் எஸ்.பாலபுத்திரன், நன்றியுரையை கணக்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பீ. நிமலதாசன் ஆகியோர் நிகழ்த்தினர். (137)

# வரிவிலக்கு அளிப்பதா? பரிசீலிக்கிறது மாநகரசபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட 2000 ரூபா வியாபாரம் இடம் பெறுகின்ற வியாபார நிலையங்களுக்கு வரிவிலக்கு வழங்குவது தொடர்பில் யாழ்.மாநகரசபை பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் யாழ்.மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டக் கூட்டத்தின்போதே இவ்விட யம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை கடந்த மாதாந்தக் கூட்டத்தின் போது யாழ்.மாநகர சபை துணைமுதல்வர் ரமீஸ் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட 2000 ரூபாவிற்கு குறைவாக நாளாந்த வியாபாரம் பெற்றுவரும் வியாபார நிலையங்களுக்கு வரிவிலக்கு வழங்கப்பட்ட வேண்டும் என்றும் 2014ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் அவ்விடயம் சேர்க்கப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இதன் கீழ் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத்தெரிவித்த யாழ்.மாநகர ஆணையாளர் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் 2000 ரூபாவிற்கு மேற்பட்ட வியாபாரம் நடைபெறும் வியாபார நிலையங்கள் இருப்பதாகவும். அவற்றிற்கு வரிவிலக்கு வழங்கும் பட்சத்தில் யாழ்.மாநகர சபையின் வருமானத்தில் பெருமளவு விழுக்காடு ஏற்படும் என்று தெரிவித்ததுடன் இது குறித்து மாநகரசபை உறுப்பினர்கள் சிந்தித்து தீர்மானம் மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (பா)

## முரசின் இன்றைய பலன்



(07.12.2013 சனிக்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி.
திருவோண நட்சத்திரம் மு.இ. 10.40 வரை.
பின் அவிட்டம், சதுர்த்தி/பஞ்சமி மு.இ. 7.20 வரை.
இராகுகாலம் 09.17 - 10.47 வரை. சுபநேரம் 03.17 - 04.47 வரை.

ஜோதிட வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பரீட்சைக்கு தோற்றுவதற்காக பெற்றோர் பிள்ளைக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தல், திடீரென தேகநலம் பாதிப்பு. |
| ரிஷபம் | பிழையாக நடந்ததால் சட்ட நடவடிக்கைக்குட்படல், சகிப்புத்தன்மை, பொறுமையைக் கடைப்பிடித்ததால் வந்த துயரம் விலகிப் போதல். |
| மிதுனம் | பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு பிழையான அறிவுரைகளை ஏற்றுக்கொள்வதை தவிர்த்தல், மாணவர் விசாவில் வெளியூர் சென்றவர் திருமணபந்தத்தில் ஈடுபடல். |
| கடகம் | மங்கள காரியம் நடாத்துவதற்கு ஆபரணங்களை அடகு வைத்துப்பணம் பெறுதல், நம்பகத்தன்மை அற்றுப்போதல். |
| சிம்மம் | நண்பர்களின் பிரச்சினைகளை தீர்க்க முயலுதல், நீரிழிவு நோயினால் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல். |
| கன்னி | உதவி செய்வதாக உங்களுக்கு வாக்குறுதி அளித்தவர்கள் ஏமாற்றுவர், புதிய மனைகட்ட சோதிட விற்பன்னரை நாடுதல். |
| துலாம் | நிலுவையில் இருந்த காரியமொன்று முயற்சியால் முடித்து வைத்தல், வாகன விபத்திலிருந்து மயிரிழையில் உயிர்தப்புதல். |
| விருச்சிகம் | மற்றவர்களை நம்பி முக்கியமான அலுவலை ஒப்படைக்காது தாமே அதைசெய்தல், அரசுப்பதவி நிரந்தரமின்மையால் விவாகம் இழுபட்டுச் செல்லல். |
| தனுசு | பிணை துணைக்கு ஈடுபடவும் சாட்சிக்கு, சிபார்சிற்கு சம்மதப்படவும் வேண்டாம், சுமூகமான பேச்சால் இடமாற்றம் ஒத்திவைத்தல். |
| மகரம் | அனுபவத்தின் மூலம் தெளிவான முடிவெடுத்தல், பிள்ளைகள் உதவாததால் பெற்றோர் கவலை. |
| கும்பம் | பிறரைக் குறை காண்பதைக் கைவிட்டு உங்களை மாற்றிக் கொள்வதால் காரிய ஜெயம், வேலைப் பளுவால் குடும்பத்தில் மகிழ்ச்சி குறைவடைதல். |
| மீனம் | அமங்கள நிகழ்வால் சுபகாரியம் பிற்போடல், நிலுவை அதிகரித்தமையினால் தொலைபேசி, மின்சாரம் துண்டிக்கப்படும் நிலை ஏற்படல். |



# பந்து அறிமுகம்

அடுத்த ஆண்டு பிரேஸிலில் நடைபெறவுள்ள பீபா உலகக் கிண்ண கால்பந்துத் தொடருக்கான பந்து நேற்று முன்தினம் அறிமுகப் படுத்தப்பட்டது. பிரேஸவூகா என பெயரிடப்பட்டுள்ள. இப்பந்தை பிரபல விளையாட்டு பொருட்கள் உற்பத்தி நிறுவனமாக அடிடாஸ் நிறுவனம் பிரேஸிலின் ரியோ டி ஜெனீரோவில் கோலாகலமாக அறிமுகப்படுத்தியது. பிரேஸிலிய என பொருள்படும் பெயர் கொண்ட இப்பந்தானது உலகக்கிண்ண கால்பந்தாட்ட வரலாற்றில் பயன்படுத்தப் பட்ட பந்துகளில் மிகவும் வண்ணமயமான பந்து எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலியுறதேன் மூலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இப்பந்தில் 6 பொருத்துக்கள் உள்ளது. உலகக்கிண்ண தொடருக்கு தகுதி பெற்றுள் அணிகள் அனைத்தும் விரைவில் பிரேஸவூகா பந்தில் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளன.

# மைலோ கிண்ண கால்பந்து

## அரையிறுதியில் கொலின்ஸ் வல்லை விண்மீன்

(பருத்தித்துறை)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கொலின்ஸ், வல்லை, விண்மீன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் முதன் முறையாக நடாத்தும் லீக் அணிகளுக்கிடையிலான மைலோ கிண்ண கால்பந்துத் தொடரின் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டிகள் பருத்தித்துறை இமையாணன் மத்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.


இதில் நேற்றைய தினம் மூன்று காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது காலிறுதிப் போட்டியில் வல்வெட்டித்துறை வல்வை அணியும், பருத்தித்துறை சென்.சேவியர் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இருப்பினும் வல்லை அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் பருத்தித்துறை கொலின்ஸ் அணியும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கொலின்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவதாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இமையாணன் மத்தி அணியும், பொலிகை விண்மீன் அணியும் மோதின. இதில் விண்மீன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, நான்காவது காலிறுதிப் போட்டி இன்றையதினம் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற அணிகள் யாழ். துரைப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளதாகவும், யாழ்ப்பாண லீக் அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளதாகவும், இதில் முதல் நான்கு இடங்களைப்பிடிக்கும் அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எஸ்.பி., 93)

# பிராவோ இரட்டைச் சதம் தப்பியது இனிங்ஸ் தோல்வி



டரன் பிராவோவின் இரட்டைச் சதத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி இனிங்ஸ் தோல்வியிலிருந்து தப்பித்து கொண்டது. நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நியூசிலாந்தின் டினேடினில் நடைபெற்று வருகின்றது.

இரண்டாவது இனிங்ஸிற்காக இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடர்ந்து. ஒரு முனையில் நங்கூரம்போல தன்னைநிலை நிறுத்திக் கொண்ட டரன் பிராவோ அணியை இனிங்ஸ் தோல்வியிலிருந்து மீட்கப் போராடினார். மறுமுனையிலோ விக்கெட்டுக்கள் வேகமாக வீழ்த்தப்பட்டது. இவருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் விதமாக எவரும் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இருப்பினும் பொறுமையாக ஆடிய டரன் பிராவோ இரட்டைச்சதம் விளாசி அணியை இனிங்ஸ் தோல்வியிலிருந்து மீட்டார்.இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 443 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மிகவும் சிறப்பாக ஆடிய டரன் பிரவோ 404 பந்துகளை எதிர்காண்டு 30 பவுண்டரிகள் அடங்கலாக 210 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதுள்ளார். டெஸ்ட் அரங்கில் பிராவோவின் கன்னி இரட்டைச் சதமாகவும், ஐந்தாவது சதமாகவும் இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது. மற்றும் கப்டன் டரன் சமி ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 47 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் இறுதி நாளாகும். நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 609/9. மே.தீவுகள் முதல் இனிங்ஸ் 213.

# சூதாட்ட வலையில் நியூசிலாந்து வீரர்கள்

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட மூன்று முன்னாள் நியூசிலாந்து வீரர்கள் சிக்கினர். இவர்களிடம் ஐ.சி.சி., விசாரணை நடத்தி வருகிறது.

நியூசிலாந்து அணியின் முன்னாள் சகலதுறைவீரர் கிறிஸ் கெய்ர்ன்ஸ்.இவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் தான் பிறிமியர் தொடருக்கான ஏலத்தில் சேர்க்கவில்லை என, அப்போதைய தலைவர் லலித் மோடி குற்றம்சாட்டினார். இது தொடர்பாக இங்கிலாந்து நீதிமன்றில் வழக்கு தொடுத்த கெய்ர்ன்ஸ், தான் குற்றமற்றவர் என நிரூபித்தார்.

இந்நிலையில் நியூசிலாந்து ஹெரால்ட் பத்திரிகை வெளியிட்ட செய்தியில், கெய்ர்ன்ஸ், டேரல் டெபி, லூ வின்சென்ட் ஆகிய மூன்று முன்னாள் நியூசிலாந்து வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத்தெரிகிறது. இவர்களிடம் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) ஊழல் தடுப்பு மைய அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனை உறுதி செய்த லூ வின்சென்ட் கூறுகையில், ஐ.சி.சி., விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறேன். இது தொடர்பாக வெளிப்படையாக கருத்து எதுவும் கூற முடியாது என்றார்.

சர்ச்சைக்குரிய கெய்ர்ன்ஸ் கூறுகையில் சூதாட்டம் தொடர்பான வழக்கில் எனக்குச் சாதகமாக இங்கிலாந்து நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு அளித்துள்ளது. தற்போது ஊடகங்களில் வெளியான செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. என்னை



ஐ.சி.சி., மற்றும் நியூசிலாந்து கிரிக்கெட் நிர்வாகிகள் யாரும் தொடர்பு கொள்ளவில்லை என்றார். தற்போதையசூதாட்டம் எங்கு நடந்தது, எந்தப்போட்டியில் நடந்தது என்பதுபோன்ற விவரங்கள் தெரியவில்லை. விசாரணை நடப்பதை ஒப்புக்கொண்ட ஐ.சி.சி., சம்பந்தப்பட்ட வீரர்களின் பெயரை வெளியிட மறுத்தது. இது குறித்துஐ.சி.சி., வெளியிட்ட அறிக்கையில்,கடந்த சில மாதங்களாக ஊழல் தடுப்பு அதிகாரிகள் நியூசிலாந்தில்முகாமிட்டு விசாரணை நடத்துவது உண்மை தான். விசாரணை தொடர்ந்து நடப்பதாலும், யார் மீதும் குற்றம் பதிவு செய்யப்படாததாலும் பெயர்களை வெளியிட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 2015இல் நியூசிலாந்து, அவுஸ்ரேலியாவில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தச் சூழலில் சூதாட்ட புயல் காரணமாக, நியூசிலாந்து அரசியல் வட்டாரத்திலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ கூறுகையில், நியூசிலாந்து மிகவும் நேர்மையான நாடு என்ற கருத்து இருக்கிறது. தற்போதைய சூதாட்ட புகார் மிகுந்த கவலை அளிக்கிறது என்றார்.

# இந்தியாவில் உலக கிண்ண கால்பந்து

பல்வேறு சர்ச்சைகளை கடந்து,2017இல் பிபா உலகக் கோப்பை கால்பந்து தொடரை (17 வயதுக் குட்பட்டோர்) நடத்தும் அரிய வாய்ப்பை இந்தியா பெற்றது. வரும் 2017இல் உலக கோப்பை கால் பந்துத்தொடரை (17வயதுக்குட்பட்டோர்) நடத்த இந்தியா, தென்னாபிரிக்கா, அயர்லாந்து, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் போட்டியிட்டன. இது தொடர்பாக நேற்று முன்தினம் பிரேசிலில் நடைபெற்ற சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (பிபா) செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. இதில், இந்தியாவுக்கு வாய்ப்பு வழங்கப் பட்டது. இதன் மூலம் போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில், உலக கோப்பைத் தொடருக்கு தகுதி பெற்ற இந்தியா புதிய வரலாறு படைத்தது. தவிர, இந்திய கால்பந்து வரலாற்றில் பிபாவின் மிகப் பெரும் ஒரு தொடரை நடத்த இருப்பது இதுவே முதல் முறை.


இத்தொடரை மிக நீண்ட போராட்டத்துக்கு பின் இந்தியா பெற்றுள்ளது. ஸ்பான்சர்களுக்கு வரி விலக்கு, போக்குவரத்து, வெளிநாட்டு வீரர்களுக்கான தங்குமிடம், பாதுகாப்பு, விசா வழங்குவது உள்ளிட்ட விடயங்களில் அரசின் உத்தரவாதம் இல்லாததால் இந்தியாவின் விண்ணப்பம் கடந்த ஜனவரியில் நிராகரிக்கப்பட்டது. பின் அரசு ஒத்துழைக்க, மீண்டும் நவம்பர் 15இல் விண்ணப்பித்தது. தற்போது பல பிரச்சினைகளை கடந்து போட்டியை நடாத்தும் உரிமையைப் பெற்றுள்ளது. இது இந்தியாவில் கால்பந்து விளையாட்டுக்கு புத்துயிர் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிளார்க், ஹடின் சதம்; ஆஸி. முழு ஆதிக்கம்

(அடிலெய்ட்)


கிளார்க், ஹடின் ஆகியோரின் சதத்தின் மூலம் அடிலெய்ட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி முழு ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

இங்கிலாந்து,அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷெஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக் கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களை பெற்ற நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை அவுஸ் ரேலிய அணி தொடர்ந்தது. ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்து பொறுப்பாக ஆடிய கப்டன் கிளார்க், ஹடின் ஆகியோர் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களை திணறடித்ததுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இந்த ஜோடியை பிரிக்கும் முனைப்புடன் இங்கிலாந்து கப்டன் செயற்பட்டபோதும் அது முடியவில்லை. ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி இணைப்பாட்டமாக 200 ஓட்டங்களைப் பெற்றதுடன் சதமும் அடித்தனர். இறுதியில் அவுஸ்ரேலிய அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கப்டன் கிளார்க் 245 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டரிகள் அடங்கலாக 148 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் கிளார்க் பெற்றுக்கொண்ட 26ஆவது சதமாக இது அமைந்தது. ஹடின் 177 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள் அடங்லாக 118 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் ஹடின் பெற்ற நான்காவது சதமாக அது அமைந்தது. ஹரிஸ் 55, நதன் லயன் 17 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரூவெட் புரொட் மூன்று, ஸ்வான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஒருவிக்கெட்டை இழந்து 35 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. இதில் ரூத் 55 பந்துகளை எதிர்கொண்டு 9, மிச்செல் கார்பெறி 62 பந்துகளை எதிர்கொண்டு 20 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.





# ஆசிய பசுபிக் ஒலிம்பிக் போட்டியில் கோண்டாவில் சிவபூமி வீரர் வெண்கலம்



(திருநெல்வேலி)

ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டியில் சிவபூமி வீரர் சிவராஜா தனுசன் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டி அவுஸ்ரேலியாவின் நியூகாசிஸ் சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையைச் சேர்ந்த மூன்று வீரர்கள் இலங்கை சார்பாக பங்குகொண்டனர்.

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்ட சிவராஜா தனுசன் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

இதேவேளை, இப்போட்டியில் இரண்டாவது சுற்றின் போது மிகவும் வேகமாக ஓடிய சிவராஜா துஷ்யந்தன் இறுதி எல்லைக் கோட்டை நெருங்கும் வேளை எதிர்பாராத விதமாக வீழ்ந்ததினால் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளார். இவர் கடந்த 2011ஆம் ஆண்டு கிறிஸ் நாட்டில் நடைபெற்ற விசேட ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது. இதில் இந்த ஆண்டு வெண்கலப் பதக்கம் வென்ற தனுசன் மற்றும் துஷ்யந்தன் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சுத்திறனற்ற மாற்றுவலுவுள்ள இவ்வீரர்கள் திறமையாகச் செயற்பட்டமை பாராட்டுதற்குரிய விடயம் என்றும், இவர்களின் சாதனையை சர்வதேச தொலைக்காட்சிகள் பெருமைப்படுத்தியுள்ளதாகவும் இலங்கை அணியின் பணிப்பாளர் பிரான்சிஸ் போல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவர்கள் தாயகம் திரும்பும்வேளை கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பெரும் வரவேற்பு அளிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (137)




## சென். அன்ரனீஸ், திருக்குமரன் அரையிறுதிக்கு முன்னேற்றம்

(உரும்பிராய்)

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் தலைவர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பாசையூர் சென். அன்ரனீஸ் மற்றும் திருக்குமரன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவம் பெற்றுள்ள அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் யாழ்ப்பாண லீக் தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்துத் தொடர் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் முதல் போட்டியில் ஊரெழு றோயல் அணியும், பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இதில் சிறப்பாக ஆடிய சென். அன்ரனீஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் உரும்பிராய் திருக்குமரன் அணியும், ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதின. இப்போட்டியில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதியது. இதன் காரணமாக போட்டி நிறைவுக்கு வந்தவேளை இரு அணிகளும் இரு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தன. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் திருக்குமரன் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பாடுமீன் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதேவேளை இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி)

## யாழ். கால்பந்து லீக்கின் கூட்டம்

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டத்திற்கு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ரஞ்சித் றொட்சிக்கோ கலந்துகொள்ளவுள்ளார். யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி அரியாலையில் அமைந்துள்ள யாழ். கால்பந்து பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. லீக் தலைவர் ஆர்.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ரஞ்சித் றொட்சிக்கோ மற்றும், செயலாளர் உப்பலி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இக்கூட்டத்திற்கு யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் அனைத்து கால்பந்தாட்ட அணிகளின் தலைவர், செயலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எஸ்.பி.)

## குயின்டன் டி கொக் சதம் சுருண்டது இந்தியா



இந்திய அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி பெரு வெற்றிபெற்றது. தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணிக்கு குயின்டன் டிகொக், அம்லா ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 152 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்தும் ஒரு முனையில் சிறப்பாக ஆடிய குயின்டன் டி கொக் சதம் அடித்து அசத்தினார். பின்னர் களமிறங்கிய கப்டன் டி வில்லியர்ஸ், டுமினி இந்திய அணிப் பந்து வீச்சாளர்களைப் புரட்டியெடுத்து ஓட்டங்களைக் குவித்தனர். இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 358 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குயின்டன் டி கொக் 121 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், 18 பவுண்டரிகள் அடங்கலாக 135, அம்லா 65, கப்டன் டிவில்லியர்ஸ் 47 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 77, டுமினி 29 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகிந் சர்மா மூன்று, ஹேராலி ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 359 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் டோனி, ஹேராலி, ஜடேஜா ஓரளவுக்குத் தாக்குப் பிடித்து ஆடியபோதும் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. இறுதியில் இந்திய அணி 41 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் டோனி 65, ஹேராலி 31, ஜடேஜா 29 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன், மெக்லாரன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக குயின்டன் டிகொக் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி நாளை டர்பனில் நடைபெறவுள்ளது.

## அடுத்த ஒலிம்பிக்கில் அள்ளுவோம் பதக்கங்கள்

(லண்டன்)

2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை வெல்ல முடியும் என பிரித்தானிய விளையாட்டு சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பிரித்தானியா குறிப்பிடத்தக்க அளவு சோபிக்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது.

எனினும் இந்தப் பின்னடைவு, 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கை பாதிக்காது என்று, பிரித்தானியாவின் விளையாட்டுத்துறைச் சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.


## நாளை இறுதியாட்டம்

(லண்டன்)

மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வந்த மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நாளை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையிடுமா?

- வே. அர்ச்சுனன் -




இந்தியா மீண்டும் இலங்கை விவகாரத்தில் நேரடியாக தலையீடு செய்வதற்கான நிலைமைகள் உருவாகி வருவதாக தற்போது அரசியல் அரங்கில் பெரியளவில் பேசப்பட்டு வருகின்ற போதிலும் உண்மையில் அதற்கான வாய்ப்புகள் இல்லை. குறிப்பாக இந்தியப் பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாக வந்துள்ள செய்திகளின் அடிப்படையிலேயே இத்தகைய பேச்சுக்கள் உருவாகியுள்ளன. ஆனால், இந்தியா இலங்கையை முட்டி மோதிக்கொண்டு அடுத்த கட்ட நகர்விற்குச் செல்லும் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

அதாவது இலங்கை விவகாரத்தில் ஏற்கனவே பட்டுப்பழுத்த இந்தியா இலங்கை அரசுடன் பேசி 13ஆவது அரசியல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துமே தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது மக்கள் மத்தியில் மேற்கொண்டு வரும் பிரசாரங்களைப் போன்று நேரடித் தலையீட்டை மேற்கொள்ளவும் மாட்டாது, தனது படையை இலங்கைக்கு மீண்டும் ஒருபோதும் அனுப்பவும் மாட்டாது.

இந்த அரசியல் யதார்த்தத்தை கூட்டமைப்பினர் புரிந்து வைத்திருக்கின்ற போதிலும், தமிழ் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் நோக்குடன் இவ்வாறான பொய்ப்பரப்புரைகளை வேண்டுமென்றே பரப்பி வருகின்றனர்.



இந்தியா தனது பூகோள பிராந்திய நலனிற்கு முன்னுரிமை கொடுத்தவாறு தனது செயற்றிட்டத்தை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாக, தென்னாசிய வட்டகைக்குள் தன்னைப் பலம் பொருந்திய நாடாக காட்டவேண்டிய ஒரு தேவை ஒருபுறம் இருக்க மறு-புறம் சீனாவின் நெருக்கடிகள் சீனாவின் ஆயுத படையியல் வளர்ச்சிகள் என்பனவும் இருந்து வருகின்றன. இலங்கையை இதற்கான கேந்திர மையமாக பயன்படுத்த இரண்டு நாடுகளும் மறைமுகமான போட்டியில் இருக்கின்றன என்பதெல்லாம் தெரிந்ததுதான்.

இலங்கை சீனாவுடன் ஏற்படுத்தி வருகின்ற ஒப்பந்தங்கள், சீனாவுடனான உறவுகள் என்பன இந்தியாவை அசௌகரியப்படுத்துகின்றன. இந்த நிலையில் இலங்கையின் மனித உரிமை மீறல் விவகாரங்களுக்கு எதிராக சர்வதேச சமூகம் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில் அந்த சர்வதேச சமூகத்துடன் அல்லது மேற்கத்தைய நாடுகளுடன் உறவுகளை முறையான விதத்தில் பேணியவாறு இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஒரு உத்தியை இந்தியா கையாண்டு வருகிறது.

அதாவது இலங்கையை எதிர்ப்பது போன்று வெளிப்படையாகக் காட்டிக்கொண்டு மறைமுகமாக இலங்கைக்கு மேற்குலக நாடுகள் போடும் அழுத்தங்களை குறைக்கும் செயற்பாட்டிலும் இந்தியா ஈடுபட்டு வருகிறது. இலங்கையையும் பகைக்காமல் மேற்குலக நாடுகளையும் பகைக்காமல் வெட்டியோடும் ஒரு அரசியல் படலத்தை இந்தியா நடத்துகிறது. அதாவது இலங்கை விவகாரத்தை சர்வதேசம் தனது கைக்குள் முழுமையாக எடுப்பதை தவிர்க்கும் விதமாக இந்தியா தனது காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற கொமென்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளாமையானது இலங்கை மீதான கோபத்தினாலோ, அல்லது இலங்கையை எதிர்ப்பதற்காகவோ அல்ல. மாறாக, இந்தியாவில் தேர்தல்கள் இடம்பெறவுள்ள சூழ்நிலையில் தமிழ் நாட்டு எதிர்ப்பலைகளை சமாளிக்கவே தனது கொழும்புப் பயணத்தை தவிர்த்துக் கொண்டார்.

தற்போதைய யாழ்ப்பாண விஜய திட்டமும் இலங்கைக்கு எதிரான ஒரு செயற்றிட்டத்தினுடனான விஜயம் என எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக தென்னிலங்கை அரசியல்வாதிகள் எதிர்பார்ப்பது போன்று கடுமையான விடயங்கள் எதுவுமே நடந்துவிட வாய்ப்பில்லை. பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை ஏற்காத இந்தியப் பிரதமர் வடக்கு மாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று அங்கு செல்வதற்காக இலங்கை வருவாரானால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்க்குமென அக் கட்சி எச்சரித்துள்ளது.

அதேவேளை இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் அரசியல் விவகாரங்களில் முரண்பாடுகள் காணப்பட்டாலும் இராணுவ உறவு மிகவும் வலுவானதாக உள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் புதுடில்லியிலிருந்து வெளிவரும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு விலாவாரியாக தெரிவித்துள்ளார். இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளில் அவ்வப்போது இறுக்கமான நிலைப்பாட்டை புதுடில்லி கடைப்பிடித்தாலும் இருநாடுகளுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்புகளும் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைவும், தொடர்ந்தும் ஒரு உச்சக்கட்ட சுமுக நிலையில் நீடித்துவருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதாவது தமிழ்நாட்டு அழுத்தங்களுக்கேற்ப இலங்கை உடனான அரசியல் இராஜதந்திர உறவு சில சமயம் ஆட்டம் காணலாம். ஆனால் இத்தகைய காரணிகளினால் இருநாட்டு இராணுவ உறவு-களை எவரும் கட்டிப்போட முடியாது என இந்தியாவின் நிலைப்பாட்டை மறைமுகமாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதையெல்லாம் பார்க்கும் போது, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை பிரித்தானியா அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் கூட்டாக கொண்டுவரவுள்ள சூழ்நிலையில் இந்தியா கடந்த முறை நடந்துகொண்டது போலவே நடந்துகொள்ளும் எனத் தெரிகிறது. அதாவது மேற்குலக நாடுகளுக்கு ஆதரவு அளிப்பது போன்று காட்டிக்கொண்டு மறைமுகமாக இலங்கைக்கு எதிரான கடுமையான தீர்மானங்களை தவிர்ப்பதற்கே முயற்சி எடுக்கும். எனவே இலங்கைக்கு எதிராக இந்தியா வெளிப்படையாக பெரியளவிலான செயற்பாட்டை முன்னெடுக்கும் என்ற பரப்புரை உண்மையானதல்ல.

இந்தியாவின் செல்ல[illegible]ள்ளையாகவும், கைப்பொம்மையாகவும் செயற்பட்டு வரும் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்தியா மீண்டும் தனது இராணுவத்தை இலங்கையில் இறக்கினால் தங்களது பழைய நாடகத்தை மீண்டும் ஆடலாம் என கனவு காண்கின்றார். ஆனால், தலைமைப் பதவிக்கும், தனது தம்பிக்குப் பதவி வேண்டும் என்றும் அடிபட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை இந்தியாவும் இப்பொழுது சின்னத் தனமாகவே பார்க்கத் தொடங்கிவிட்டது. இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடித் தலையீட்டை மேற்கொள்[illegible] இனி வாய்ப்புகள் இல்[illegible] என்பது அவருக்கும், அந்த நப்பாசையை வளர்ப்பவர்களுக்கும் புரியவேண்டும்.

---

# இவர்கள் சொன்னவை...



★ சட்டை போட்டுக் கொள்வது, வளையல் போட்டுக் கொள்வது என்று அணிகலன்களுக்குச் சொல்கிறோம். வடை சாப்பிடுங்கள், சோறு சாப்பிடுங்கள் என்றெல்லாம் உண்ணும் பொருள்களைப் பற்றி சொல்கிறோம். வெற்றிலை பாக்கும் வாய் வழியே வயிற்றுக்குள் போவதுதான். ஆனால், அதைச் சாப்பிடுங்கள் என சொல்லாமல், வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்ளுங்கள் எனச் சொல்வது ஏன்?

இதற்கு கிருபானந்த வாரியார் சொல்லிய விளக்கம்: "பசியை ஆற்ற உண்பதை சாப்பிடுவது என்றும் அலங்காரத்திற்காக அணிவதைப் போட்டுக் கொள்வது என்றும் சொல்கிறோம். வயிறு நிறைய உண்டபின் வாய்க்கு அலங்கார மாகத்தான் வெற்றிலை பயன்படுகிறது. எனவே, தாம்பூலம் போட்டுக் கொள்ளுங்கள் என்கிறோம். வெற்றிலை பசியை ஆற்ற பயன்படுத்தப்படுவதில்லை"

★ இந்தியப் பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் பிரதமர் நேருவிடம் கேட்கக் கூடாத விஷயம் குறித்து ஒரு கேள்வி எழுப்பினார். அந்தக் கேள்விக்கு பதில் சொல்லக்கூடாது. ஆனால் உறுப்பினர்க்கு பதில் கூற வேண்டும். உடனே நேரு தன்னிடத்தில் உள்ள குறிப்புகளைப் புரட்டினார். அவை அனைத்தும் வெறும் வெள்ளைத் தாள்கள். சிறிது நேரம் கழித்து நேரு உறுப்பினரைப் பார்த்து, "நீங்கள் எவ்வளவு டிவிஷன் படை நம் இராணுவத்தில் இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ? அவ்வளவு டிவிஷன் படை நம் இராணுவத்தில் உள்ளது" என்றாராம். உறுப்பினர் அமைதியானார்.

★ பெரியார் ஈ.வெ.ரா., ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு ரயிலில் பயணம் செய்வதற்காக அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்தக் கூட்டம் முடியும்வரை இருந்து பெரியாரின் பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு மனிதருக்குப் பெரியாரிடம் ஒரு விளக்கம் கேட்பதற்கு ஆசை ஏற்பட்டது.

அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருந்த பெரியார் முன்னால் போய் நின்றார்.

அவரைப் பார்த்து, "பொதுநலம் என்றால் என்ன? சுயநலம் என்றால் என்ன?" என்று கேட்டார்.

உடனே பெரியார் சட்டென்று, "மழை பெய்வது பொதுநலம்! குடை பிடிப்பது சுயநலம்!" என்று ஒரே வரியில் பதிலளித்துவிட்டுப் புறப்பட்டார்.

★ ஒரு தடவை கி.வா.ஜ. அவர்களை ஒரு முக்கியமான நிகழ்ச்சிக்கு அழைத்துச்செல்ல கார் கொண்டு வந்திருந்தார்கள்.

கி.வா.ஜ. காரின் பின்னால் ஏறப்போனார். அப்போது உள்ளே இருந்த நண்பர்களில் ஒருவர், "ஐயா, நீங்கள் முன்னேறுங்கள்" என்று சிலேடையாகச் சொன்னார்.

அதுக்கு கி.வா.ஜ. உடனே, "தெரியும்... தெரியும்... உங்கள் திருட்டுத்தனம். நான் உங்களுக்குப் புறங்காட்ட வேண்டும் என்பது உங்கள் ஆசை" என்று சொல்லி சிரிக்க வைத்தாராம்.

★ கருணாநிதி தலைமையில் நாதஸ்வர ஜாம்பவான் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுக்கு பாராட்டு விழா நடந்தது. "எனக்குப் பேச வராது" என்று கூறி ஒரு தாளைக்காட்டி, "வாசித்து விடுகிறேன்" என்றார் கிருஷ்ணன்.

கருணாநிதி தனது நிறைவுரையில், "நாமகிரிப் பேட்டையை வாசிக்கத்தானே கேட்டோம். பேசவா கேட்டோம்?" என்று சொன்னதும் பலத்த கரவொலி!

★ தன்னை வணங்கும் மனிதனைத் தவிர, வேறு எந்த ஜீவராசியையும், சிரிக்கவோ, பிச்சை எடுக்கவோ தெரியாமல் படைத்த கடவுளின் உள் நோக்கம் என்ன?

கண்ணதாசன் பதில்: "மற்ற ஜீவராசிகளுக்கு இல்லாத ஒரு பரிசை, கடவுள் நமக்கு கொடுத்திருக்கிறான் அதுதான் ஆறாவது அறிவு. அந்த அளவுக்குத் தண்டனையையும், தந்தாகத்தானே வேண்டும். இந்தக் கேள்வியை, மனிதனைத் தவிர வேறு எந்த விலங்காவது கேட்குமா?"

தமிழ்சினிமாவில் கிட்டப்பாவுக்கும் தியாகராஜபாகதவருக்கும் கடும் போட்டி நிலவிய காலகட்டம். பாகவதரின் பவளக்கொடி நாடகம் தமிழ்நாடு முழுக்க சக்கை போடு போடுகிறது. இதுகுறித்து கேள்விப்பட்ட கிட்டப்பாவுக்கு "அந்த நாடகத்தில அப்படி என்னதான்யா இருக்கு"" என்று பார்க்க ஆவல்.

அதனால் மாறுவேடம் போட்டுக்கொண்டு நாடகத்தை போய் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்துவிடுகிறார் கிட்டப்பா. அதைப்பற்றி தன் மனைவி கேபி சுந்தராம்பாளிடம் சொல்கிறார். அதைகேட்ட கேபி சுந்தராம்பாளுக்கும் அந்த நாடகத்தைப் பார்க்கும் ஆசை வருகிறது. உடனே கேபி சுந்தராம்பாள் கணவனுக்கு தெரியாமல் ரகசியமாக போய் பார்த்துவிட்டு வந்துவிடுகிறார். இது கிட்டப்பாவுக்கு எப்படியோ தெரியவர பெருங்கோபமாகி கேபி சுந்தராம்பாளை கடும்சொற்களால் போட்டு புரட்டி எடுத்துவிடுகிறார்.


அந்த நேரத்தில் வருத்தத்தோடு கேபி சுந்தராம்பாள் ஒரு கடிதத்தினை தன் கணவருக்கு எழுதுகிறார்.


"என்னை நடத்தை கெட்டவள் என்று ஏசிய உங்களுக்கு நரகம்தான் மிஞ்சும" என்று அதில் எழுதப்பட்டுள்ளது.

கேபி சுந்தராம்பாள் கடிதங்கள் என்கிற நூலிலில் இக்கடிதம் இடம்பெற்றுள்ளது.

- ஆர்.எஸ்.அந்தணன் -

## சுந்தராம்பாள் கடிதம்





## "ஒட்டந்துள்ளல்"

"கேரளாவில், "கதகளி" என்ற நடனம் ஆடுகின்றனர். அது உங்களுக்குத் தெரியும். ஆனால், "ஒட்டந்துள்ளல்" என்ற ஒரு நடனமும் அங்கே மிகவும் பிரசித்தம். இந்த "ஒட்டந்துள்ளல்" என்பது ஒன்றும் புது நடனமல்ல. கதகளி பல நூற்றாண்டுகளாக எந்தவித மாறுதலும் இல்லாமல் அப்படியே இருக்கிறது. அந்த நடன முறையில் சில மாறுதல்களை செய்து, ஒட்டந்துள்ளல் என்ற புதிய நடனக் கலையைக் கண்டுபிடித்தனர்...

கதகளியில் பல நடிகர்கள் பங்கெடுத்துக் கொள்கின்றனர். ஆனால், ஒட்டந்துள்ளலில் ஒரே ஒரு நடிகர் தான். இது, கதாகாலட்சேப முறையை ஒத்திருக்கும். கதகளி முறையில் முகபாவங்களையும், ஆங்காங்கே நடிப்பையும் வெளியிட்டுக் கொண்டே, ராமாயணம், மகாபாரதம் கதைகளை உள்ளடக்கிய மலையாளப் பாடல்களை ஒட்டந்துள்ளல் நடிகர் பாடுகிறார். பெரும்பாலும் மக்களுக்கு நன்கு தெரிந்த நாட்டுப் பாடல்களே இவை.

நல்ல வேலைப்பாடுள்ள ஒரு கிரீடம். மணிகளும், பல வர்ணக் கண்ணாடித் துண்டுகளும் பதிக்கப்பட்டு வேலைப்பாடுள்ள ஓர் மார்புக் கவசம். கைத்தறித் துணியில் தைத்த ஒரு ஆடை. இவற்றை ஒட்டந்துள்ளல் நடிகர் அணிந்திருப்பார். சலங்கை கட்டி அவர்கள் ஆடும்போது, தாளக்கட்டு தானாகவே ஏற்பட்டு விடும். "பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மலையாளக் கவிஞர் குஞ்சன் நம்பியார் கண்டுபிடித்த நடனம் இது. வெகு எளிய குடும்பத்தில் பிறந்த இவர், கதகளி பயிற்சி பெற்றார். கதகளி, காலப் போக்கில் பிரபுத்துவ டாம்பீகமாக ஆகிவிட்டதை அவர் உணர்ந்தார். அதனால், இவர், இந்த ஒட்டந்துள்ளலை ஆரம்பித்தார். இந்த புதிய நடனமுறை மக்களிடம் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றது. இன்றும் கூட திறமையான ஒரு ஒட்டந்துள்ளல் நடிகருக்குக் கிடைக்கும் சபை வரவேற்பு, வேறு முறை நடனக் கலைஞருக்குக் கிடைப்பதில்லை - கேரளத்தில்!

# இணையத்தில் பின்னப்படும் பூதாகர மாயவலைகள்

எந்த ஒரு புதிய தொழில்நுட்பம் வந்தாலும் அதை முதலில் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்பவர்கள் கெடுமதி படைத்தவர்கள் தான். அவர்களது கிரிமினல் மூளைதான் அந்தத் தொழில் நுட்பத்தின் சாத்தியக்கூறுகளை முழுவதுமாக ஆராய்ந்து முதலில் புரிந்துகொள்ளும். இணையமும் சமூக வலைத்தளங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

இணையத்தை வணிகத்துக்காக முதலில் பயன்படுத்திக்கொண்டவர்கள் போர்னோ படங்களை விற்றவர்கள்தான். எண்ணற்ற ஆபாச வலைத்தளங்கள் உருவாகின. ஒரு கட்டத்தில், அதிக ஹிட்கள் பெறும் முதல் இருபது தளங்கள் அனைத்துமே போர்னோ தளங்களாக இருந்தன. பின்னர், கிரெடிட் கார்ட் மூலம் மாதாமாதம் சந்தா பெறும் தளங்களாக ஆனவை யும் இவைதான். அதன் பின்னர்தான் நியாயமான வணிக நிறுவனங்கள் பலவும் தம் பொருள்களை விற்பதற்கும் சேவைகளைத் தருவதற்கும் இணையத் தைப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தன.


அதேபோல, நைஜீரிய ஏமாற்று வித்தைகளையும் குறிப்பிடவேண்டும். ஏதோ ஓர் ஆபிரிக்க நாட்டின் சர்வாதிகாரி பல நூறு மில்லியன் டொலர்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டதாகவும், அதைக் கைப்பற்ற உங்கள் உதவி தேவைப்படுகிறது என்றும், அந்த சர்வாதிகாரியின் துணைவி அன்புடன் உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருப்பார். ஒரே ஒரு சின்ன பிரச்சினை.. முதலில் நீங்கள் கொஞ்சம் பணத்தை ஒரு குறிப்பிட்ட வங்கி எண்ணுக்கு அனுப்பவேண்டும். பல நூறு மில்லியன் டொலரில் நம் பங்கு கணிசமாக வரும்போது கொஞ்சம் பணத்தைப் பற்றி கவலைப்படுவானேன் என்று சிலர் பணத்தை அனுப்பியும் விடுவார்கள். இப்படித் தொடங்கி இன்னும் பல நூறு ஏமாற்று வித்தைகள் இணையத்தில் உலா வருகின்றன.

இதுபோன்ற தகிடுதத்தங்கள் ஒரு புறம் இருக்க, இப்போது சமூக வலைத் தளங்கள் குறித்து வெளியே கசியும் சில செய்திகள், இணைய ஊடகவெளி மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கும்வண்ணம் உள்ளன. ட்விட்டர், ஃபேஸ்புக் போன்ற தளங்களை சாதாரண மக்கள் தங்கள் கருத்துகளைச் சொல்லும் களமாகவும் நண்பர்களுடன் உரையாடும் இடமாகவும் வைத்திருக்கின்றனர். இது ஒருவிதத்தில் மக்களாட்சி முறைக்கு வலு சேர்க்கும் விதமாகவும் உள்ளது. ஆனால் பல அரசியல்வாதிகளும் தொழில் நிறுவனங்களும் இவற்றை வேறு கண்களுடன் பார்க்கின்றனர். அரசியல், தொழில் போட்டிகளைச் சமாளிக்கவும் எதிரிகளை ஒழிக்கக் காய் நகர்த்தவும் இணையத்தைப் பயன்படுத்த இவர்கள் முன்வந்துள்ளதாகத் தெரிகிறது. இவர்களுக்கு உதவுவதற்கு என்றே பல இணைய மார்க்கெட்டிங் நிறுவனங்களும் முளைத்துள்ளன.

ட்விட்டரில் பின்பற்றுவோர் எண்ணிக்கையை அதிகரிக்கவென்றே மாயக் கணக்குகளை விலைக்கு விற்க பல ஏஜென்சிகள் இருக்கின்றன என்று தெரியவந்துள்ளது. இந்த ஏஜென்சிகள் ஒளிந்து மறைந்தெல்லாம் இயங்குவதில்லை. வெளிப்படையாகவே இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கலாம்.

நிழல் உலக தாதா ஒருவரைச் சந்தித்து "என் தொழில்முறை எதிரியுடைய ஃபோட்டோவும் முகவரியும் இவைதான். இவரைப் போட்டுத் தள்ளிவிடு, இந்தா பணம்" என்று ஒருவர் சொல்வதைப் போல, ஒரு தொழிலதிபர் ஓர் இணைய மார்க்கெட்டிங் ஏஜென்சியை அணுகி பிசினஸ் பேசலாம். பணம் கைமாறும். அந்த இணைய மார்க்கெட்டிங் ஏஜென்சி, அந்தக் குறிப்பிட்ட தொழிலதிபருடைய நிறுவனத்தின் ட்விட்டர் அக்கவுண்ட்டை ஒரே நாளில் சில ஆயிரம் மாயக் கணக்குகள் பின்பற்றுமாறு செய்வார்கள். அவர்களுடைய ஃபேஸ்புக் பக்கத்தில் வரும் தகவல்களுக்கெல்லாம் சில மாயக் கணக்குகள் பொய் லைக்குகள் போட்டுக்கொண்டே இருக்கும்.

அதோடு விடமாட்டார்கள். எதிரி நிறுவனம் பற்றிப் பொய் வதந்திகளைப்




பரப்பும் ஓர் இணையதளம் இரவோடு இரவாகத் தோன்றும். ஊர் பேர் போடாமல் தெருவில் ஒட்டப்படும் கண்டன போஸ்டர்போல அல்லது அலுவலகத்துக்கு வரும் மொட்டைக் கடிதம்போல. பின்னர், மாயக் கணக்குகள் இந்தப் பொய்த் தகவல்களை ட்விட்டரிலும் ஃபேஸ்புக்கிலும் பரப்பும். எல்லாவற்றுக்கும் ஒரு குறிப்பிட்ட விலை உண்டு.

இந்தத் தகவல்களை உண்மை என்று நம்பும் உண்மையான பலரும்கூட இவற்றை ஃபேஸ்புக்கில் லைக் செய்து, ட்விட்டரில் ரீட்வீட் செய்து மேலும் மேலும் பரப்புவார்கள். மின்னஞ்சல்மூலம் பல்லாயிரம் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

இன்று, ஓர் அரசியல்வாதியின் பிம்பத்தைக் கட்டி எழுப்புவது முதல், ஒரு முழு அரசியல் பிரசாரத்தையுமே இணையத்தின் மெய்நிகர் உலகில் செய்துவிட முடியும். அந்த அரசியல்வாதிக்கென்று ஓர் இணையத்தளத்தையும் ட்விட்டர், ஃபேஸ்புக் கணக்குகளையும் தொடங்குவதிலிருந்து இந்தப் பிரசாரம் ஆரம்பிக்கும். பின்னிருந்து இயக்கும் மார்க்கெட்டிங் ஏஜென்சியின் உதவி யால் அரசியல்வாதியின் இணைய பிம்பம் வலுவாகிக்கொண்டே போகும். அவர் அனைத்தைப் பற்றியும் கருத்து சொல்வார். அறிக்கைகள் விடுவார். அவரது எதிரிகள் குறித்து இணையத்தில் வம்பும் வதந்தியும் பெருகும். இதன் நீட்சியாக அவர் தேர்தலில் ஜெயித்தாலும் ஜெயிக்கலாம்.

இவற்றையெல்லாம் புலன்விசாரித்து, உண்மையைக் கண்டுபிடிப்பது சாத்தியமே. ஆனால் நேரம் ஆகும். அந்த நேரத்தில் தேர்தலே நடந்து முடிந்துவிடலாம்.

கெடுமதியாளர்கள் கையில் சிக்கிச் சின்னாபின்னமாகும் சமூக வலைத்தளங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட நேரிடும். ஒரு கட்டத்தில் யார் உண்மை பேசுகிறார்கள், யார் பொய் பேசுகிறார்கள் என்பதே தெரியாமல் போய்விடும்.

நிஜ வாழ்க்கையில்கூட எதை நம்பலாம் என்ற தெளிவு நம்மிடம் ஓரளவுக்கு இருக்கிறது. ஆனால் இணைய வாழ்க்கையில் எதை நம்புவது என்று தெரியாமல் தடுமாறும் நிலையை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கிறோம். பயன்படுத்துவதற்கு எளிமையாக உள்ள இணையம், சாதாரண மக்களைவிட கிரிமினல் எண்ணம்

——— பத்ரி சேஷாத்ரி கட்டுரையிலிருந்து.

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# பகிரங்க மடல்

செய் அல்லது செத்து மடி என்று கூறிக்கொண்டு அரசியலுக்கு வந்த அமைச்சர் குருகுலராஜா "எமக்குச் சேவகம் செய்யுங்கள் அல்லது செத்துப் போங்கள்" என்று இறுமாப்போடு மமதையாக வன்னியில் பாதிக்கப்பட்டவர்களிடம் கூறியுள்ளார்.

இவ்விடயம் பற்றி மேலும் கடந்த 18 ஆம் திகதி வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா மன்னாருக்கு தமது பரிவாரங்களுடன் மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியூடாக பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது அவர் செல்கின்ற வழியில் கல்விளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இருப்பதைக் கண்டு தமது பயணக்களைப்பைப் போக்குவதற்காக அப்பாடசாலைக்குச் சென்றுள்ளார். இதனை அவதானித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு இனம்புரியாத அதிர்ச்சியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டது. "எங்கட கல்வி அமைச்சர் வந்திருக்கிறார், எங்கட குருகுலராஜா சேர் வந்திருக்கிறார்........" எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரப்பட்டார்கள். கல்விளாங்குளம் பாடசாலை வெள்ளாங்குளம் வீதியில் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் காட்டுப்புறத்தில் காணப்படுகின்றது.

அதிபர் ஆசிரியர்களுடன் கல்வி அமைச்சர் குருகுலராஜா கலந்துரையாடி அங்குள்ள குறை நிறைகளைக் கேட்டறிந்துகொண்டார். அவ்வேளையில் அப்பாடசாலையில் குறைந்த சம்பளத்துடன் சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரிய உதவியாளர்கள் நான்கு பேர் கல்வி அமைச்சரைச் சந்தித்து தமது நிலை பற்றி எடுத்துக் கூறுவதற்காக அமைச்சருடன் வந்த உயரதிகாரிகளிடம் அனுமதி கேட்டபோது "உங்கட கல்வி அமைச்சர்தானே, அவர் ஒரு தமிழர் உங்கட பிரச்சினைகளைத் தெரிந்தவர், உங்கட பிரச்சினைகளைக் கேட்கத்தான்



இங்கு வந்தவர்,உங்களுக்கு என்ன அனுமதி உங்கட கல்வி அமைச்சரிடம் சென்று பிரச்சினையைக் கதையுங்கள்." என்று அவர்கள் கூறியுள்ளார்கள். இதனைக் கேட்டு உற்சாகப்பட்ட ஆசிரிய உதவியாளர்கள் கல்வி அமைச்சர் குருகுலராஜாவை அணுகி "சேர், நாங்கள் ஆசிரிய உதவியாளர்களாக சேவையாற்றுகிறோம் மற்ற ஆசிரியர்கள் போல முழு நேரமாக நாமும் பணிசெய்கின்றோம். எமக்கு 6000 ரூபா சம்பளம் மட்டும்தான் வழங்கப்படுகின்றது. இச்சம்பளத்தைக் கொண்டு எமது குடும்பச் செலவுகளைக் கவனிக்கமுடியாது மிகவும் கஷ்ரமான நிலையே காணப்படுகின்றது" என்று கூறி தமது சம்பள அதிகரிப்புப் பற்றிக் கேட்டபோது. "உங்களை எல்லாம் யார் பாடசாலைக்கு வரச்சொன்னது? நீங்ள் ஏன் இஞ்ச வாறியள்? உங்களையெல்லாம் நம்பி இப்ப நாங்கள் பாடசாலை நடத்தேல்லை! விரும்பினால் வந்து அந்தச் சம்பளத்துக்குச் சேவையாற்றுங்கோ! விருப்பமில்லையென்றால் இந்தப் பக்கம் வரவேண்டாம்!" என்று இறுமாப்போடு அதிகாரத் தொனியில் அனைவர் முன்பாகவும் பேசிவிட்டு உதாசினம் செய்து அவர்களை ஒரு மனிதராகக்கூடப் பார்க்காமல் சென்று தமது வாகனத்தில் ஏறியுள்ளார் இதனை அவதானித்த அப்பாடசாலையின் ஏனைய ஆசிரியர்களால் கூடத்தாங்கிக் கொள்ளமுடியவில்லை. "இவர்கள் இனி இப்படித்தான் கதைப்பார்கள்" என்று கூறிப் பெருமூச்சு மட்டும்தான் விட்டார்கள்.

தமிழ் மக்களின் கஷ்ரங்களைக் கூறி, உரிமை உரிமை என்று பாசாங்கு காட்டி ஏழை மக்களின் வாக்குக்களைத் திருடி ஆட்சிக்கு வந்துவிட்டார்கள்தானே இவர்கள் இனி இப்படித்தான் கதைப்பார்கள் என்று கூறி கவலைப்பட்டார்கள் அந்த ஆசிரிய உதவியாளர்கள்.

வன்னியிலுள்ள பாடசாலைகளில் 15 வருட காலமாக தொண்டர் ஆசிரியர்கள் என்று பலர் சேவையாற்றி தமது வாழ்க்கையை அழித்து ஏங்கி நிற்பதற்கு இப்போதுள்ள கல்வி அமைச்சர் குருகுலராஜா முக்கிய காரணமானவராவார். இவர் வன்னியில் வலயக்கல்விப்பணிப்பாளராக இருந்த காலத்தில் பல்ரை பாடசாலைகளில் தொண்டர்களாக நியமிக்க இவரே நியமனக் கடிதங்களை வழங்கி அனுமதியளித்திருந்தார். இதனை இவர் இன்று மறந்துவிட்டார் என்பது கவலைக்குரிய விடயமாகும். அன்று வலயக்கல்விப்பணிப்பாளராக இருந்த இப்போதைய கல்வி அமைச்சர் குருகுலராஜாவும் அப்போது வலயக்கல்விப் பணிப்பாளராகவும் இப்போது வடமாகாண சபை உறுப்பினராகவும் இருக்கும் ப.அரியரத்தினமும்தான் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்களாகப் பலரையும் நியமித்திருந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இவர்களே இப்படிப் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்கின்றார் கள்.

இதைத்தான் செய் அல்லது செத்து மடி என்று சொல்லிக்கொண்டு வந்தாரோ வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா. மக்களை உசுப்பேத்தி மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து வந்து இன்று அரச சுகபோகமும் அனுபவித்துக்கொண்டு மக்களின் கஷ்ரங்களை தமது சுயலாபத்திற்காகக் கூறி வெளிநாட்டு மக்கள் பணத்தில் இராஜ வாழ்க்கை வாழ்பவர்களுக்கு எங்க தெரியப்போகிறது பாதிக்கப்பட்டு கஷ்ரப்படுபவர்களின் துன்ப துயரங்கள்! ம்!

**(சம்பவம் அனைத்தும் உண்மை மேலதிக விபரத்திற்கு முல்லைத்தீவு, துணுக்காய் வலயத்திலுள்ள கல்விளான்குளம் அ.த.க. பாடசாலை ஆசிரிய உதவியாளர்களைத் தொடர்புகொண்டால் அறியலாம்.)**



# புதிர்ப் போட்டி 69



**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

*புதிர்ப்போட்டி 69 இற்குரிய. விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 28.12.2013*

### சென்றவார விடைகள்

### கதை கேளு! கணக்குப் போடு



தவளை 14 முறை தாவியிருந்தால் பாசி வழுக்கிக் கீழே சென்ற தன்படி 14 அடி மேலே வந்திருக்கும். 15 ஆவது முறை தாவியபோது, இரண்டடி தாவி கிணற்றின் வெளிப்பக்கம் வந்து வெளி உலகைப் பார்த்து இரசித்திருக்கும்.

### சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர்:- ம.யோதீஸ்வரன்
பாடசாலை :- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர்:- சி.தேனுஜான்
பாடசாலை :- யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

பெயர்:- யோ.தனுசன்
பாடசாலை :- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர்:- வி.நிலேக்கா
பாடசாலை :- யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

பெயர்:- அ.மற்றில்டா
பாடசாலை :- யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

### கணிதப்புதிர்கள்




1) இரண்டு இலக்கங்களை கொண்டு எழுதக் கூடிய மிகச்சிறிய முழு வெண் என்ன ?

2) பத்து இலக்கங்கள் அனைத்தையும் (0-9) உபயோகித்து 1 ஐ எழுதுங்கள்.

3) ஐந்து 9 களைக் கொண்டு 10 ஐ எழுதுங்கள்.

4) பத்து இலக்கங்கள் அனைத்தையும் (0-9) உபயோகித்து 100 ஐ எழுதுங்கள்.

5) ஒரே மாதிரியான ஐந்து இலக்கங்களைக் கொண்டு 100 ஐ எழுதுவதற்கு வெவ்வேறான நான்கு வழிகளைக் காட்டுங்கள்.

### அனுப்பவேண்டிய முகவரி

*புதிர்ப்போட்டி இல*
*தினமுரசு*
*இல. 373, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர்ப்போட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

### விடுகதைகள்

1. கண்ணாடி போல் மின்னும், காற்றிலே இது மிதக்கும், கண்பட்ட மாயத்தில் காற்றில் கலந்துவிடும். அது என்ன?
2. காலைப் பிடிப்பவனுக்குக் கழுத்தைப் பிடித்தால் போச்சு. கழுத்தைப் பிடிப்பவனுக்குக் காலைப் பிடித்தால் போச்சு. அது என்ன?
3. சக்கையாய்ப் பிழிந்தாலும் தன் குணம் மாறாது. பொக்கை வாய்ப் பெரியவரும் புன்னகைத்து அருந்திடு வார். அது என்ன?
4. தலைமேலே கவசம் உடம்பெல்லாம் கண். அது என்ன?
5. கிண்ணி போலப் பூப்பூக்கும். கிள்ளி முடிக்க உதவாது. அது என்ன?
6. கையில் தவழும், பையில் உறங்கும். அது என்ன?
7. சந்துக்குள் இருந்து சதிராடுவான். சண்டைக்கும் சரி, சமாதானத்துக்கும் சரி. அவன் யார்?
8. நித்தம் நித்தம் உழுவான். பல் வரிசைக்காரன். அவன் யார்?
9. காட்டில் பாடித் திரிந்தாலும் என்னைக் கச்சேரிக்கு அழைப்பதில்லை. நான் யார்?
10. வடிகட்டும் முட்டாளுக்கு வாய்த்த உடம்போ ஓட்டை. அது என்ன?

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ------------------------------------------------

பாடசாலையின் பெயர் :- ------------------------------------------------

தரம் :- ------------------------------------------------

தொலைபேசி இல :- ------------------------------------------------

முகவரி :- ------------------------------------------------

# அரச பதவிகளில் மாற்றுத்திறனாளிகள்

## மூன்று சதவீத இட ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகளில் வெற்றிடங்களை நிரப்பும் போது மாற்றுவலுவுள்ளோருக்கு மூன்று சதவீதம் இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து கடைபபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாற்றுவலுவுள்ளோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் சிற்றூழியர்களாகவும், உத்தியோகத்தர்களாகவும், மாற்று வலுவுள்ளோர் அரச சேவையில் இணைக்கப்பட்டு வந்தனர். அவ்வாறு சேவையில் இணைந்தோர் திருப்திகரமான முறையில் தமது பணிகளைச் செய்து வந்துளளனர்.

எனினும் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனம், சபைகளில் வெற்றிடங்களை நிரப்பும் போது மாற்று வலுவுள்ளோருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டவில்லை.

எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்ப ஆட்சேர்ப்புச் செய்யும்போது மாற்று வலுவுள்ளோருக்கு உரிய சந்தர்ப்பங்களை வழங்க மக்கள் பிரதிநிதிகள், அரச திணைக்க்ள கூட்டுத்தபான சபைகளின் தலைவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த ஒதுக்கீட்டை வழங்கவேண்டும் என வடமராட்சி மாற்றுவலுவுடையோர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(109)

# வடமராட்சியில் திருட்டு கட்டுமீறும் அபாயம்

## ஒரு வாரத்தில் ஐந்து சம்பவங்கள்

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பல்வேறு இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி பொலிகண்டி பாலாவி குடியேற்றத்திட்டத்திலுள்ள விஜயகரன் திலகவதனா என்பவரின் வீட்டில் மதிலால் ஏறிப்பாய்ந்த திருடர்கள் அங்கிருந்த NPXC 5776 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றுள்ளனர். மழை பெய்ததை சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

அதேபோன்று வல்வை மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள வெ.கண்ணதாசன் என்பவரது கடையில் முப்பதாயிரம் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

அத்துடன் கொம்மாந்தறைப் பகுதியில் மாலைநேரம் நான்கு ஆடுகளும் திருடப்பட்டுள்ளன. அன்றையதினம் பொலிகண்டிப் பகுதியிலுள்ள பெருமளவான வீடுகளின் கதவுகள் இரவு நேரம் தட்டப்பட்டதாகவும் எனினும் மக்கள் எவரும் அச்சம் காரணமாக கதவுகளை திறக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்போதைய மழை காலத்தைப் பயன்பத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்ட முயற்சிப்பார்களெனவும், எனவே பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(116)

# வீடு புகுந்து திருடர்கள் தாக்குதல்;

## மூவர் மருத்துவமனையில்

உடுவில் கற்பகப்பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் இடம்பெற்ற கொள்ளை முயற்சியின் போது குறித்த வீட்டிலுள்ள மூவர் கோடாரி வெட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 12.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும்தெரியவருவதாவது உடுவில் லவ்லேனில் உள்ள தோட்டவெளியில் அமைந்துள்ள வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் சத்தமின்றி வீடடினுள் நுழைய முயன்றுள்ளனர்.

இந்த வேளையில் வீட்டில் உள்ள நாய் குரைத்ததைத் தொடர்ந்து வீட்டுக்காரர் வீட்டின் பின் கதவைத்திறந்து வெளியில் வர முற்படுகையில் பின் கதவுடன் கொள்ளையர்கள் நிற்பதைக் கண்டு சத்தமிட்ட போது கொள்ளையர்கள் வீட்டுகாரரைத் தாக்கியுள்ளனர்.

சத்தம் கேட்டு தூக்கத்தில் இருந்த மகன் எழுந்து வந்த வேளையில் கோடரியால் அவரின் தலையிலும், தகப்பனின் தலையிலும் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த வயோதிபத் தாய் மற்றும் மனைவி, மகள், மகன் ஆகியோரைத் தாக்கி ஒரு இடத்தில் இருக்க வைத்துவிட்டு பணம் மற்றும் நகைகளைத் தேடியுள்ளனர்.

எதுவும் அகப்படாத நிலையில் தாயையும் கோடரியால் தாக்க, சத்தம் கேட்டு அயலவர்கள் உஷார் அடைந்ததை அடுத்து கொள்ளையர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.


கொள்ளையர்கள் தப்பிச் சென்ற போது தமது கையடையாளங்கள் காணப்படக்கூடிய இடங்கள் எனக் கருதப்பட்ட இடங்களை நீர் ஊற்றி அழித்துவிட்டும் சென்றுள்ளனர்.

அத்தோடு, வீட்டில் இருந்த சேலையை எடுத்துச் சென்று வீதியில் காணப்பட்ட வெள்ளத்தில் தமது உடம்பில் பட்ட இரத்தக்கறைகளைக் கழுவிவிட்டுச் சேலையையும் வெள்ளத்தில் வீசி சென்றுள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தில் செல்லத்துரை சண்முகநாதன் (வயது - 54), அவரது மனைவி சண்முகநாதன் நாகேஸ்வரி (வயது-48), மகன் யதுசன் (வயது-20) ஆகியோர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மகனின் நிலை மிகவும் ஆபத்தாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில், சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(17, இ)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முல்லைத்தீவு கிளையினால் முல்லைத்தீவு இரத்த வங்கியின் அனுசரணையுடன் இரத்ததான நிகழ்வொன்று கடந்த திங்கட்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றது. இதில் குருதிக்கொடையாளர்கள் இரத்ததானம் செய்வதைக் காணலாம். (40)




## உள்வீட்டுப்பிரச்சினைக்கு ஊருக்குள் தீர்வு கிடைக்குமா?....

ஒட்டுமொத்த கரகோசத்தின் மத்தியிலும் ஒருமனிதன் அமைதியாய் இருக்கின்றான் என்றால் அந்த அமைதிக்கு அர்த்தமில்லை என்று அதை நிராகரித்துவிட முடியாது. அதிலிருக்கும் அர்த்தத்தையும் அலசிப்பார்ப்பதுதான் அடுத்து வரும் கரகோசத்தைத் திட்டமிடும். அனைவரும் போடுகின்றனர் என்பதற்காக அரோகராப் போடும் காலமில்லை இது. கணத்திற்குக்கணம் நிலைமாறும் உலகமிது.

இதன் அடிப்படையில் வாரம் தோறும் வரும் வாரமொரு காரம் யதார்த்த சிந்தனையை சமூகப் பெரும்பான்மை ஏற்புடமைக் கப்பால் முன்வைத்து வருகின்றது. காரணம் இதுவரை ஓடும் நீரில் ஒன்றுபட்டு ஓடியமையால்தான் பல இழப்புக்களைத் தமிழினம் சந்தித்தது. ஒருகணம் நின்று ஓடும் திசை சரியா என சிந்தித்திருந்தால் பாதைகள் தெரியாத பயணங்களாக எமது வாழ்வு மாறிஇருக்காது.

ஆகவே அர்த்தமான யதார்த்த சிந்தனை எம்மிடம் வேண்டும். கட்சிசார்பற்ற முன்வைப்புக்கள் எமக்கு வேண்டும். மக்கள் மயப்படுத்தப்பட்ட பார்வைகள் அரசியலில் வேண்டும். அந்த வகையில் இந்தவாரம் ஒரு காரம் சொல்வது என்ன?...

மக்கள் வாழ்வுரிமைக்கு முன்னுரிமை கொடுக்காதது அரசின் தப்பு. அதேவேளை உள்வீட்டு முரண்பாட்டை ஊருக்கு அம்பலப்படுத்தித் தீர்க்கலாமெனை நினைப்பது மக்களின் தப்பு. மறுதுருவத்தில் மக்களின் இந்தத் தப்பு ஏன் வலுப்பெற்றது என்றால் அது மீண்டும் அரசின் தப்பு. இந்த நம்பிக்கையீனங்களை இருவருக்குமிடையில் உருவாக்கியது யாருடைய தப்பு? அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தப்பு.

பிறந்த மண், வாழ்ந்த இடம், வழிபட்ட கோவில், படித்த கல்லூரி இவற்றை மீட்டுத்தாருங்கள் எனக் கோருவதில் என்ன தப்பு? மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகளைக் கூட வென்றெடுத்துக் கொடுக்கமுடியவில்லையானால் மக்கள் அங்கீகாரம் பெற்ற முதலமைச்சர்கள், அமைச்சர்கள் இருந்து என்ன பயன? மக்கள் அங்கீகாரம் கொடுத்த அரசியல் வாதிகளாலும் கட்சிகளாலும் செய்ய முடியாத ஒன்றை அங்கீகாரம் கொடுக்காத கட்சிகளும் அரசியல் வாதிகளும் ஏன் செய்யவேண்டும் எப்படிச் செய்ய முடியும்?...


இது ஒருபுறமிருக்க ஐ.நா. பிரதிநிதிகளிடமோ அல்லது சர்வதேச நாடுகளிடமோ கூறித்தான் உள்நாட்டுத்தீர்வுகளைப் பெறமுடியுமென்றால் அரசியல் அங்கத்துவக்கதிரைகளில் முதலமைச்சர்கள்என்று ஏன் அமர்ந்திருப்பான்? இதனை முன்பே காரம் தெளிவாகக்கூறியது. "தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறலாம் முதலமைச்சராகலாம் ஆனால் அவர்களால் எதனையும் தமிழ் மக்களிற்கு பெற்றுக்கொடுக்க முடியாதென்று"

ஆணித்தரமாக இதைச் சொல்லமுடியும். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றிருந்தால் அரச நம்பிக்கைக் கூடாக தமிழ் மக்களிற்கு பலவற்றைச் சாதித்துக் கொடுத்திருக்கும். இதற்கு மாறாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டுமொரு இன முரண்பாட்டை இலங்கையில் வலுப்படுத்தப்போகினறது. மத்திய அரசியன் வலைப்பின்னலில் இயங்கும் வடமாகாண முதலமைச்சர் அரசின் பிரதிநிதியாக இருந்தும் கூட எதிர்க்கட்சிகளை விட மிக மோசமாக சர்வதேச பிரதிநிதுகளுடன் பேசுகின்றார்.

அரசு செய்வது தவறாக இருப்பினும் முரண்பாடுகளை மேலும் வலுப்படுத்துவது ஆரோக்கியமல்ல என்பதை இவர் புரிந்து கொள்ளவேண்டும். நம்பிக்கையீனங்கள் தான் வடமாகாணத்தையும் மத்திய அரசையும் இன்று துண்டாடுகின்றது. இதை மேலும் வலுப்படுத்தும் செயற்பாடுகள் தான் வடமாகாண அரசியலில் இடம் பெற்றுவருகின்றது.

சர்வதேசம் தமிழர்களின் தீர்வுக்குப்பதில் சொல்லுமென்றால் முள்ளிவாய்க்காலில் தமிழினம் மூச்சுத்திணறும் போது சர்வதேசம் ஏன் தடுத்து நிறுத்த வில்லை. நவநீதம்பிள்ளை வந்தார், கமரூன் வந்தார், தற்போது கலாநிதி வந்துள்ளார். பார்ப்போம் இவர்களிற்குப்பின் தமிழர்களிற்குத் தீர்வும் வருகின்றதா என?...

சர்வதேச பிரசாரங்கள் எல்லாமே இலங்கையரசியலில் தமிழர்களிற்குப் பின்னடைவையும், முரண்பாட்டையும் தான் அதிகரிக்கும் தீர்வை என்றுமே தேடித்தராது. வேண்டாப் பெண்டாட்டியாக இருப்பினும் வேசம் போட்டு வாழத்தான் வேண்டும் ஏனெனில் குழந்தைகள் நடுத்தெருவிற்கு சென்றுவிடும். குழந்தைகளை வளர்த்தெடுப்பதே இன்றைய அரசியலின் இலக்கு. இதை மறுத்து அரசியல் நடத்துபவர் எவரும் இலங்கையரசியலில் வெல்லமுடியாது. *– வெணகட்டியன்*





யாழ்.புகையிரத நிலைய புனரமைப்புப் பணிகள் துரித கதியில்இடம்பெற்று வருகிறது. தற்போது பெய்யும் மழைக்கு மத்தியிலும் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதைக் காண முடிகிறது. (85)

# பாடசாலைகளின் வளர்ச்சியே சமூகத்தின் எழுச்சிக்கு வழி

## ஓய்வு பெற்ற பிரதி அதிபர் கிருஸ்ணமூர்த்தி

(பருத்தித்துறை)

பாடசாலைகள் தம்மிடம் வரும் பிள்ளைகளை ஒழுங்காக நெறிப்படுத்தி மீண்டும் சமூகத்திடம் ஒப்படைக்கும்போது சமூகம அதனை மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றது. இதுவே எதிர்பார்க்கும் இலட்சிய வெற்றிக்கும் வழிவகுப்பதுடன் பாடசாலைகளின் வளர்ச்சியுடன் சமூகத்தின எழுச்சியையும் ஏற்படுத்தும்.

இவ்வாறு வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் நிறுவுனர்தின பேருரை நிகழ்த்திய கொழும்பு இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் சிவா கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும் அதிபர் கே.இராஜதுரை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி 117 வருடங்கள் வரலாறு படைத்துச் சாதனை நிகழ்த்திய கல்லூரியாகும். இக் கல்லூரியின் பெருமை யையும், கௌரவத்தையும் பாதுகாத்து வாழவைக்க வேண்டியது சமூகத்தின் பாரிய பொறுப்பா கும்.

பாடசாலை தமது பிள்ளைகளின் உயர்ச்சிக்கும், எழுச்சிக்கும் அயராது பாடுபடுகின்றது என்பதைக் காணும் பெற்றோர்களும், பாடசாலை சார் நிறுவனங்களும் பாடசாலைக்கு வேண்டிய வளங்களையும் வசதிகளையும் செய்ய முன்வருகின்றனர். இதன்மூலமே பாடசாலைகள் வளர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. இந் நிலையே எதிர்கால சுபீட்சத்திற்கு வழிவகுக்கும்.

சமூகம் தமது பிள்ளைகளுக்கும் கல்வியைச் சீராக வழங்குவதற்கு பாடசாலைகளை ஆரம்பித்தது. அரசாங்கம் தம் நாட்டுப்பிள்ளைகளுக்கும் கல்வியை வழங்குவதையும் தம் பொறுப்புடைய கடமையா கக் கொண்டு பாடசாலைகளை அமைத்தல், பராமரித்தல், விரிவுபடுத்தல், நவீன மயப்படுத்தல் செயற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலை நடவடிக்கைகளில் சமூகம் பங்குபற்று வதன் மூலம் கல்வியின் முக்கியத்துவம் பற்றி சமூகத்தின் அறிவும் விருத்தியடையும். இதனால் சமூகம் பாட சாலையின் அபிவிருத்தியில் காட்டும் ஆர்வம் அதிகரிக்கும். பாடசாலையின் வளர்ச்சி சமூகத்தின் எழுச்சியை எடுத்துக் காட்டும் அதேநேரம் பாடசாலையின் தளர்ச்சி சமூகத்தின் தாழ்ச்சியையும் புலப்படுத்தும் என்றார்.

(01)

# ஒளிராத மின் விளக்குகளால் இருளில் மூழ்கியுள்ள கே.கே.எஸ். வீதி



(வலிகாமம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கே.கே.எஸ் வீதியின் கோணடாவில் பகுதியிலுள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் சில மாதங்களாக ஒளிராமல் காணப் படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியின் மின் விளக்குகள் ஒளிர்ந்த காலத்தில், திருடர்களின் அச்சமின்றி இப்பகுதி மக்கள் இருந்தனர் எனவும், ஆனால் இந்த மின்விளக்குகள் தற்போது ஒளிராத காரணத்தினால், திருடர்களின் அச்சம் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள தாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தின் குறுக்கு வீதியொன்றில் அமைந்துள்ள வீடொன்றிலே கடந்த மாதம் மாலை நேரம் இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதாகவும், இந்த நபர்கள் ஓடி மறைந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியின் மின் விளக்குகள் பழுதடைந்து பல மாதங்களாகியும் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் பொதுமக்களிடமிருந்து வரிப் பணத்தைப் பெறும் பிரதேச சபை இதில் கவனம் எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(06)

# தொடர்கின்றது சீரற்ற வானிலை; அவதானத்துடன் செயற்பட அறிவுறுத்து



நாட்டின் சில பகுதிகளில் நிலவும் சீரற்ற வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.குறிப்பாக வடக்கு,கிழக்கு,மலையகம், வடமேல் மாகாணம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்து வருகின்றது.

வடபகுதியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், தற்காலிக குடியிருப்புக்களில் வாழும் மக்கள் இதனால் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் கடும் மழை பெய்துவருகின்றது.மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வீதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்திலும் அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. புத்தளம் பிரதேசத்தில் கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளை தவிர்த்து வருகின்றனர். இதனால் சந்தையில் மீனின் விலை அதிகரித்துள்ளது

இதேவேளை, நாட்டின் அநேகமான பகுதிகளில் மழையுடன் கூடிய வானிலை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என திணைக்களம் அறிவித்துள்ளது. காலி முதல் மட்டக்களப்பு ஊடாக யாழ்ப்பாணம் வரையான கடற்பிரதேசம் கொந்தளிப்பாகவும் அபாயகரமானதாகவும் அமையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது

# கிருமிநாசினி விசிறிய விவசாயி மயங்கிய நிலையில் மீட்பு

முந்திரிகைத்தோட்டத்திற்கு கிருமிநாசனி விசிறிக் கொண்டிருந்த விவசாயி ஒருவர் தெளிகருவியுடன் மயங்கிய நிலையில் தோட்டத்தில் இருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது.

இணுவில் பகுதியில் கடந்த வாரம் முந்திரிகைத்தோட்டத்திற்கு கிருமிநாசினி தெளித் துக் கொண்டிருந்த அவ் ஊரைச் சேர்ந்த இ. சுரேசன் (வயது35) என்ற விவசாயி தெளிகருவியுடன் மயக்கமுற்று தோட்டத்தில் வீழ்ந்துள்ளார்.

மதியநேரம் தோட்டத்தில் யாருமற்ற நிலையில் நீண்ட நேரம் மயங்கிய நிலையில் கிடந்த அவரை தற்செயலாக அவ் வழியே சென்றவர்கள் அவதானித்து உறவினர்களுக்கு தகவல் வழங்கியதால் அவர் காப்பாற்றப்பட்டு தெல்லிப்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (120)

# சிகிச்சை நிலையம் திறப்பு

மாற்றுத்திறனாளிகளுக்கான சரீர புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடமாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம், யு.எஸ். எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி, ஹன்டிகெப் இன்ரெநெஷினல் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஆகியோர் இணைந்து இந்தக் கட்டடத்தினைத் திறந்து வைத்தனர்.

யு.எஸ்.எயிட் நிறுவனம், ஹன்டிகெப் இன்ரநெ'னல் நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த கட்டிடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈச்சலவக்கை பாடசாலைக்கு நிதி உதவி



மன்னார் வடக்கு ஈச்சலவக்கை ஆரம்ப பாடசாலையின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்ய ஜப்பான் அரசாங்கம் 104,835 அமெரிக்க டொலர்களை (12.5 மில்லியன் ரூபா) அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இப்பாடசாலையின் கல்விச் சூழலை மேம்படுத்தும் திட்டத்தை மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் "ப்லேன் சிறிலங்கா" நிறுவனம் அமுல்படுத்துகின்றது. இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிதோ ஹொபொ மற்றும் ப்லேன் சிறிலங்கா நிறுவனத்தின் வதிவிட நிறை வேற்று அதிகாரி நெட் எஸ்பி ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

### விஞ்ஞானமும், தொழில்நுட்பவியலும்

**01) புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு கனிப்பொருட்கள் பல உள்ளன. அவற்றினை மூலப்பொருளாகக் கொண்டு பல்வேறு வகையான கைத்தொழில்கள் உருவாக்கப்படுகின்றன.**

1. புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு பொருட்கள் நான்கை பெயரிடுக.
2. உலகில் இரத்தினக்கற்கள் காணப்படும் இடங்களில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
3. இரத்தினக் கற்களின் நிறையை அளக்கப் பயன்படும் அலகு எது?
4. இரத்தினக் கற்களின் சிறப்பியல்புகள் தங்கியுள்ள காரணிகள் எவை?
5.
   அ. களிமண்ணைப் பயன்படுத்திச் செய்யப்படும் கைத்தொழில்கள் இரண்டு கூறுக.
   ஆ. பதப்படுத்தப்பட்ட களிமண் கொண்டுள்ள சிறப்பியல்புகள் இரண்டு கூறுக.
6.
   அ. மணல் மண்ணின் பிரதான கூறு எது?
   ஆ. கண்ணாடி உற்பத்திற்குப் பயன்படும் மணல் மண் காணப்படும் பிரதேசங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
7.
   அ. கல்சியம் காபனேற்றை மூலப்பொருளாகக் கொண்டு மேற் கொள்ளப்படும் கைத்தொழில்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ஆ. இலங்கையில் சுண்ணாம்பு உற்பத்தியில் காணப்படும் குறைபாடுகள் 2 தருக.
8. i) வானிலையாலழிதல் எனும் பதத்தினை வரையறுக்குக.
   ii) பாறைகள் சிதைவடையும் இரண்டு வழிமுறைகளை குறிப்பிடுக.

**02) இலங்கைக்கு அந்நியச் செலாவணியினை ஈட்டித்தருகின்ற பெருந்தோட்டப் பயிர்களில் இறப்பரும் ஒன்றாகும்.**


1. இறப்பரில் காணப்படும் சிறப்பியல்புகள் 2 தருக. இறப்பர் தாவர தண்டின் எப்பகுதியில் அதிகளவு பால் காணப்படுகிறது?
2. பாற்கலங்களை வெட்டும்போது அவற்றிலிருந்து பால் வெளியேறக் காணரமான செயற்பாடு எது?
3. உறைந்த இறப்பர் பால் கொண்டுள்ள கூறுகள் எவை?
4. அ. இறப்பர் பால் திரட்சியடைவதை தடுக்கும் பதார்த்தங்கள் எவ்வாறு அழைக்கப்படும்.
   ஆ. அவ்வாறான பதார்த்தங்கள் இரண்டு கூறுக.
5. பதப்படுத்தப்பட்ட இறப்பர் பால் நான்கு வகைப்படும் அவை எவை?
6. கிறேப் றப்பர் உற்பத்தியின்போது வெளிற்றியாகப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம் எது?
7. அ. இறப்பரில் காணப்படும் சில இயல்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வாறான இயல்புகள் மூன்று தருக.
   ஆ. இறப்பரிலுள்ள இயல்புகளை மாற்றும் முறை எவ்வாறு அழைக்கப்படும்.
8. அ. இறப்பர் பாலிலுள்ள இறப்பரின் செறிவை அளக்கப் பயன் படும் உபகரணம் எது?
   ஆ. மரத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பால் எவ்வளவு நேரத்தினுள் திரட்சியடைகிறது?

**03) இன்றைய நவீன உலகில் கனியநெய்யின் கைத்தொழில் பயன்பாடு பெரிதும் இன்றியமையாததாகும்.**

1. அ. பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் 4 கூறுக.
   ஆ. பெற்றோலில் அடங்கியுள்ள மூலகங்கள் எவை?
2. அ. L.P வாயு என்பதன் விரிவாக்கத்தினை எழுதுக.
   ஆ. இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?
3. அ.சேர்வையொன்றிலுள்ள காபனின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அச்சேர்வையின் இயல்புகளில் எவை அதிகரிக்கின்றன?
   ஆ. இரும்பிற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் பிரதியீட்டுப் பொருளொன்றினைக் குறிப்பிடுக.
4. பண்படுத்தப்படாத எண்ணெயின் பக்கவிளைபொருட்கள் சில கீழே தரப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து உருவாகும் பிரதியீட்டுப் பொருட்கள் ஒவ்வொன்று தருக.
   1) எதிலீன் 2) புறப்பலீன் 3) வீனைல் குளோரைட்டு
5. தரப்பட்டுள்ள சில பிரதியீட்டுப் பதார்த்தங்களுக்கு ஒவ்வோர் அனுகூலமும் பிரதிகூலமும் தருக.
   1) பொலித்தீன் 2) பிளாஸ்ரிக் 3) நைலோன்
6. பல்பகுதியங்கள் என்றால் என்ன? வித்தியாசமான காபன் அணுக்களைக் கொண்ட பதார்த்தங்கள் எம்முறையில் பிரித்தெடுத்து வேறுபடுத்தப்படுகிறது?
7. அ. எதேன் வாயுவின் கட்டமைப்பை வரைக.
   ஆ. இதிலுள்ள காபன்களின் எண்ணிக்கை யாது?
8. புவியில் பெற்றோலியம் எவ்வாறு உருவாகியிருக்கலாம் என்பதை சுருக்கமாக விளக்குக.


## B பகுதி

**04) செப்பு சல்பேற் கரைசலை காபன் மின் வாய்க்கள் கொண்டு மின் பகுப்பதற்கான அமைப்பை கீழே உள்ள அமைப்பு காட்டு கின்றது.**




1. நேர், மறை மின் வாய்களை X,Y களால் குறிப்பிடுக.
2. செப்புசல்பேற் கரைசலிலுள்ள அயன்கள் எவை?
3. மின்பகுப்பின் போது நடைபெறும் சக்திமாற்றத்தை குறிப்பிடுக.
4. நேர்மின்வாய் அருகில் நடைபெறும் இரசாயன மாற்றத்திற்கான சமன்பாட்டைத் தருக.
5. மறைமின் வாய் அருகில் நடைபெறும் இரசாயன மாற்றத்திற்கான சமன்பாட்டை தருக.
6. செப்புசல்பேற் கரைசல் மின்பகு பொருளாக இருப்பதற்கான காரணம் யாது?
7. இச் செயற்பாட்டின்போது குறிப்பிடத்தக்க அவதானம் யாது?
8. மின்பகாப்பொருட்கள் சிலவற்றை குறிப்பிடுக.
9. மின்பகாப்பொருளுக்கும், மின்பகுபொருளுக்கும் இடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.
10. எந்த மின் வாய் அருகில் வாயுக்குமிழியை எதிர்பார்க்கலாம்.

**05)**





மேற்காட்டப்பட்ட மின்சுற்றில் ஒவ்வொரு 2 குமிழினதும் தடை 8Ω ஆகும். வோல்ற் மானி 12V வாசிப்பைக் காட்டியது.

1. மின்குமிழ்கள் A, B எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
2. மின்குமிழ்கள் C, D எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது?
3. மின்குமிழ் C பழுதடைந்தால் ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
4. மின்குமிழ் A பழுதடைந்தால் ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
5. மின்சுற்றில் விளையுள் தடை யாது?
6. பழுதடைந்த மின்குமிழ் A ஊடுபாயும் ஓட்டம்

| | | |
|---|---|---|
| 1. | A | .................... |
| 2. | B | .................... |
| 3. | C | .................... |
| 4. | D | .................... |

7. நான்கு குமிழும் நல்ல நிலையில் இருக்க A மானி காட்டும் வாசிப்பு யாது?


06) A




கடத்தியூடாக மின் பாயும்போது கடத்தியை சூழ காந்தப்புலம் உருவாகும் என்ற கருத்தை முன்வைத்தவர் எர் ஸ்ரார் என்ப வராவார். கடத்தியூடாக மின் பாயும் போது அதைச் சூழ உருவாகும் காந்தப்புலக் கோலம் அருகே காட்டப்பட்டுள்ளது.


1. கடத்தியூடாக எத்திசையில் மின்பாய்கின்றது? (உள் நோக்கியா - வெளிநோக்கியா)
2. கடத்தியை சூழ உருவாகும் காந்தப்புலத் திசையை அறிய உதவும் விதி யாது?
3. புலத்திசையை அமைப்பில் குறித்துக் காட்டுக.

B. இக்கோட்பாட்டின் அடிப்படையில் உருவாகியதுதான் மின்காந்தம். மின்காந்தத் தயாரிப்புக்கு காவலிடப்பட்ட செப்புக்கம்பிச் சுருள் மெல்லியரும்பு அகணி இரண்டும் அவசியமாகும்.





1. வரிச்சுருளில் மின்பாயும் திசையை குறித்துக் காட்டுக.
2. X, Y ஆகிய காந்தமுனைவுகளை அறிக.
3. காந்த முனைவுகளை இனமறிவதில் நீர் பயன்படுத்திய விதி யாது?
4. மின் காந்த அளவைப் பாதிக்கும் காரணிகள் இரண்டு தருக.
5. இங்கு செப்புக்கம்பியே பயன்படக்காரணம் யாது?
6. மின்காந்தம் பயன்படும் இரு சந்தர்ப்பங்கள் தருக.

07) வீட்டு மின்சுற்றில் உள்ள கூறுகளைக் கொண்ட குற்றிப்படம் அருகே தரப்பட்டுள்ளது.




1. வீட்டு மின்வழங்கலின் வோல்ற், மீடிறனை தருக
2. X, B,C,D,E என்பவற்றைத் தருக.
3. B இன் பயன்பாடு என்ன?
4. B, Y இல் உயிர், நொதுமல் கம்பிகள் எவை?
5. எந்த ஒரு மின் சாதனமும் எம்மூடாக புவித் தொடுப்பு ஆகினால் தொழிற்படும் அமைப்பு எது?
6. விளக்குச் சுற்றுக்குச் செல்லும் X,Y தொடுகை யுறின் தொழிற்படும் அமைப்பு எது?
7. விளக்குச் சுற்றில் சாதாரணமாகப் பயன்படும் மின் வடத்துக்குரிய குறியீட்டு இலக்கம் என்ன?

08)




A,B,C ஐ இனங்காண்க.

09) i. ஒரு சந்தர்ப்பத்தில் 100W வலுவுடைய 8 மின்குமிழ்களும் 1500 W வலுவுடைய மின் அடுப்பும் 2 மணி நேரம் வேலை செய்தால்,
a. விரயமாகும் மின்சக்தி அளவை KWh அறிக.
b. விரயமாகும் மின்சக்தி அளவை Kj அறிக.

ii) 1000g திணிவுடைய நீரின் வெப்பநிலையை $30^0C$ இலிருந்து $100^0C$ இற்கு உயர்த்த அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றிற்கு 5 நிமிடங்கள் எடுத்தது. (நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4200 jkg^{-1}\,{}^0C^{-1}$)
a. வெப்பமாக்கியின் வலு யாது?
b. இக்கணித்தலின் உமது எடுகோள் யாது?

10) அணுக்கள் இணைந்து மூலக்கூறுகளை உருவாக்குகின்றன.
i) மூலக்கூறுகள் ஒரே இன அணுக்கள் இணைந்ததாகவோ வெவ்வேறு இன அணுக்கள் இணைந்ததாகவோ இருக்கலாம்.

A) மூலக்கூறுகள் உருவாகும்போது அணுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய பிணைப்பு வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.

B) நைதரசனின் அணுவெண் 7 ஆகும். இரு நைதரசன் அணுக்கள் இணைந்து நைதரசன் மூலக்கூறு உருவாகும்போது (இரு நைதரசன் அணுக்கள் இணைந்து மூலக்கூறு உருவாகும்போது) நைதரசன் அணுக் களுக்கிடையே இலத்திரன்கள் பங்கிடப்படும் முறையைக் காட்ட புள்ளடிப்படம் வரைக.

C) மக்னீசியம் கந்தகம் ஆகியவற்றின் அணு எண்கள் முறையே 12 உம் 16 உம் ஆகும். மக்னீசியம் கந்தகம் ஆகியவை உறுதியான அயனை உருவாக்கும்போது அவற்றின் இலத்திரன் நிலையமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுக.

d) உமக்கு நீரில் கரையக்கூடிய ஒரு சேர்வை தரப்பட்டுள்ளது. இச்சேர்வையில் அணுக்களுக்கிடையே உள்ள பிணைப்பின் தன்மையை அறிவதற்கு நீர் மேற்கொள்ளும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

ii) ஒரு அணுவின் இலத்திரன் நிலையமப்பிற்கும் அவ் அணுவைக் கொண்ட மூலகம் ஆவர்த்தன அட்டவணையில் இருக்கும் நிலைக்கும் இடையே தொடர்பு உள்ளது.
M என்னும் மூலகம் மூன்றாம் ஆவர்த்தனத்திலும் மூன்றாம் குடும்பத்திலும் உள்ளது. அதன் கருவில 14 நியூத்திரன்கள் உண்டு.

a) அம் மூலகத்தின் அணு எண், திணிவெண் ஆகியவற்றை தருக.

b) அம்மூலகம் ஒட்சிசனுடன் தாக்கமடைந்து ஒட்சைட்டை உருவாக்கு வதற்கான ஈடுசெய்த சமன்பாடு தருக.

iii) மக்னீசியம் ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துடன் தாக்கமடைந்து ஐதரசன் வாயுவை வெளியேற்றும்.

a) ஐதரசன் வாயுவை இனங்காண சோதனை ஒன்றைக் குறிப்பிடுக.

b) நாடாநிலையில் உள்ள மக்னீசியா தூள் நிலையில் உள்ள மக்னீசியமா விரைவாக ஐதரோக் குளோரிக் அமிலத்துடன் தாக்கமடையும் என்பதை அறிவதற்கு நீர் அமைக்கும் பரிசோதனையின் படிமுறைகளைத் தருக.

11) விஞ்ஞான விளக்கம் தருக.
1) அண்மையில் உள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்க முடியாதவர்கள் குவிவு வில்லை கொண்ட மூக்குக் கண்ணாடியால் அண்மையில் உள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்கலாம்.

2) வெல்ல நீரிழிவு உள்ளவர்கள் மாப்பொருள் நிறைந்த உணவுகளை தவிர்த்தல் நல்லது.

3) தொலைவில் இடிமின்னல் ஏற்படும் போது மின்னல் பனிச்சீட்டை அவதானித்து சொற்ப நேரத்தின் பின்னரே இடி ஒலி கேட்கிறது.

4) மக்னீசியம் ஒட்சைட்டை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றுவதன் மூலம் மக்னீசியத்தை பிரித்தெடுக்க முடியாது. ஆனால் ஈய ஒட்சைட்டை காபனுடன் சேர்த்து வெப்பமேற்றுதல் மூலம் ஈயத்தைப் பிரித்தெடுக்க லாம்.

5) நீரல் இடப்பட்ட உருளைக்கிழங்குத் துண்டுகள் விறைப்பாகக் காணப்படு கின்றன. ஆனால் செறிவான உப்புக்கரைசலில் இடப்பட்ட உருளைக் கிழங்கு துண்டுகள் மென்மையாகக் காணப்படுகின்றது.

6) இனிமையான சுவையுடைய தோடம்பழ வித்துக்களில் இருந்து உருவாக்கப்பட்ட தோடம்பழ மரங்கள் சில சமயம் புளிப்பான சுவையுடைய தோடம்பழங்களை தருகின்றன. ஆனால் நல்ல இன கிளையை ஒட்டுதல் மூலம் விருத்தி செய்யப்பட்ட தோடம்பழ மரங்களில் இருந்து கிடைக்கும் பழங்கள் எப்பொழுதும் இனிப்பான சுவையுடையதாக உள்ளது.

12)
1) முற்றிய வாழைக்காய்களை பழமாக்குவதற்கு மனிதன் பல நடவடிக்கைகளை கையாள்கின்றான். ஒரு முறை புகையூட்டுதல் ஆகும். சிலர் வைக்கோலை எரித்து அதன் புகையைப் பயன்படுத்துகின்றனர். சிலர் ஊதுபத்திகளை எரித்து அதன் புகையைப் பயன்படுத்துகின்றனர்.

a) வாழைக்காயில் பெருமளவில் காணப்படும் உணவின் கூறையும் வாழைப்பழத்தில் பெருமளவு காணப்படும் உணவின் கூறையும் தருக.

b) நீரானது குறிப்பிட்ட ஒரு கூறு வாழைக்காயிலும் வாழைப்பழத்திலும் வெவ்வேறு அளவில் உள்ளது என்பதை எடுத்துக்காட்ட எளிய பரிசோதனை தருக.

c) வாழைப்பழத்தில் வித்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் இவ்வித் துக்களில் இருந்து வாழைமரத்தை உருவாக்க இயலாது. இதற்கான காரணத்தை விளக்குக.

ii) வாழைக்காயை பழுக்க வைப்பதில் எவ்வகை புகை பழுத்தலை விரைவுபடுத்தும் என்பதை அறிய ஒரு மாணவன் பரிசோதனையில் ஈடுபடுகின்றான்.
a) அவன் முன்வைத்த கருதுகோள் யாது?

b) வாழைக்காய்கள் பழுத்துள்ளன என்பதை அவன் அறிவதற்கு உதவு காட்டி ஒன்றைக் குறிப்பிடுக.

c) வாழைக்காய்களை இரு தொகுதிகளாக எடுத்துப் பரிசோதனையில் ஈடுபடும் போது இரு தொகுதிக்கும் சமநிபந்தனைகளை அளிப்பதற்கு அவன் யாது செய்யவேண்டும்?

d) இப்பரிசோதனையில் மாணவன் மேற்கொண்ட இரு எடுகோள்களைத் தருக.

iii) காய்கள் பழங்களாக மாறுவதற்கு நொதியங்கள் உதவுகின்றன.
a) நொதியங்கள் எவ்வகையான ஊக்கி என அழைக்கின்றோம்?
b) எமது உணவுச் சமிபாட்டில் உதவும் இரு நொதியங்களின் பெயர் தருக.

# சிறப்புக்குரிய முதியவர்களை பேணிப் பாதுகாக்க வேண்டும்

## கரைச்சி பிரதேச செயலர்

(கரைச்சி)

முதியோர்களின் பாதுகாப்பை சமூகம் பேணிக் கொள்ள வேண்டும். அது ஒரு முக்கியமான கடமையாகும். இந்த மண்ணையும் நாம் அனுபவிக்கின்ற வளங்களையும் உருவாக்கியவர்கள் முதியவர்களே. அவர்களே எமக்கான பண்பாட்டையும் வாழ்க்கையையும் உருவாக்கித்தந்தவர்கள். ஆகவே அத்தகைய சிறப்புக்குரியவர்களை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும். நாளை நாமும் முதியோர் ஆவது தவிர்க்க முடியாதது என்று கரைச்சிப் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, இந்தப் பிரதேசத்தை உருவாக்குவதில் தங்களுடைய உழைப்பையும் ஆற்றலையும் அர்ப்பணித்தவர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள். இவர்கள் உருவாக்கிய இடங்களில் இருந்தே நாம் எமது இன்றைய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த வாழ்க்கையை எங்களுக்குப் பரிசளித்தவர்களை நாம் மறந்து விடக்கூடாது என்றார்.

# கல்விப் பணிப்பாளரின் வீட்டில் திருட்டு

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரின் வீட்டில் கடந்த புதன்கிழமை இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளதாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு, கணுக்கேணியில் வாடகை வீடொனறில் வசித்து வரும் குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர் முள்ளியவளை ஹிஜ்ராபுரத்தில் புதிதாக வீடொன்றை நிர்மாணித்து வருகின்றார்.

இந்நிலையில் புதிதாக நிர்மாணித்துக் கொண்டிருக்கும் வீட்டிலேயே 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுப் பொருட்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாக வலயக் கல்விப பணிப்பாளர் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விசேட பயிற்சி

Ministry of Health

வெளிநாட்டு தாதியர் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் செயற்றிட்டத்தை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதன்கீழ், பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய, இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் பயிற்சி மற்றும் ஆய்வுகள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் சுனில் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுகாதார சேவைகள் தொடர்பில் சர்வதேச நாடுகளில் கிடைத்த அங்கீகாரம் இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கு முக்கிய காரணமென சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியது

# பல்வேறு குற்றச்சாட்டுக்களில் யாழில் 199 பேர் கைது

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளில் கடந்த வாரம் பல்வேறு குற்றச்செயல்களின் நிமித்தமும் நீதிமன்றப் பிடியாணையின் பிரகாரமும் 199 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜிய சிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தக் கைதுகளில் யாழ். பொலிஸ் பிரிவில் அடித்துக்காயப்படுத்தியது சம்பந்தமாக 21 பேரும் பிடியாணையின் பிரகாரம் 25 பேரும் களவு சம்பந்தமாக ஐந்து பேரும் உட்பட 99 பேரும் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் பாரிய குற்றங்களுக்காக 12 பேரும் பிடியாணையின் பிரகாரம் 10 பேரும் சந்தேகத்தின் பேரில் 8 பேரும் ஏனையகுற்றங்களுக்காக 65 பேரும் உட்பட 100 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் 60 ஆயிரம் ரூபா பொருட்களை சேதபப்டுத்தி நஷ்டம் விளைவித்த குற்றச்சாட்டில் மயிலிட்டி மற்றும் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த எட்டுப் பேரும் இதில் அடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# கல்வியின் மூலம் பின்தங்கிய மக்கள் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர்

பின்தங்கிய பிரதேச மக்கள் கல்வியின் மூலமாக உயர்ந்த நிலைக்கு வளரவேண்டும். கல்வியின் மூலமாகவே தங்களின் பிரதேசத்தையும் முன்னேற்றிக் கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தின் 2013ஆம் ஆண்டுககான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையிலே இறுதியாக உருவாக்கப்பட்ட மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டமே உள்ளது. அதிகமாக பாதிக்கப்பட்ட மாவடமாகவும் இந்த மாவட் டமே உள்ளது. ஆனாலும் கல்வி உட்பட அனைத்துத் துறைகளிலும் கிளிநொச்சி மாவட்டம் துரிதகதியில் வளர்ச்சியடைந்து வருகிறது. இந்த முன்னேற்றத்தை நாம் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும் என்றார்.

# பாலியல் வல்லுறவு குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை

பாலியல் வல்லுறவு மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளியொருவருக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

16 வயது குறைந்த தனது மருமகள் முறையான பெண் பிள்ளையொன்றை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கத்தினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, குற்றவாளி 25, 000 ரூபா தண்டப் பணமும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 75,000 ரூபாவும் வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. அதனை வழங்கத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வருடம் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த வழக்கினை சட்டமா அதிபர் சார்பாக அரச சட்டத்தரணி நிஸாந் நாகரட்ணம் நெறிப்படுத்தியிருந்தார்.

# அதிகளவானோர் பங்கேற்கும் கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சை

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை வரலாற்றிலேயே ,அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் தோற்றுவதும், அதிக எண்ணிக்கையிலான அதிகாரிகள் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவதும் இதுவே முதற் தடவையாகுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்ப குமார தெரிவிதுள்ளார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 5 இலட்சத்து 78 ஆயிரத்து 140 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ள அதேநேரம், 76 ஆயிரத்துக்கும் அதிகமான அதிகாரிகள் பரீட்சைக கடமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

விண்ணப்பதாரிகளுள் சுமார் 20 ஆயிரம் பேர் இறுதி தறுவாயில் பரீட்சைக்கு சமுகமளிப்பது இல்லை ஒவ்வொரு மாணவர்க்கெனவும் அதிக பணம் செலவழிக்கப்படுவதனால், அவர்களை சமுகமளிக்கச் செய்வதில் பெற்றோர் அக்கறை செலுத்த வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.இதேவேளை வெலிக்கடை மகசின் சிறைச்சாலையில் மூன்று பரீட்சார்த்திகளுக்கும் நாடு முழுவதுமிருந்து 510 மாற்று திறனாளிகளுக்கும் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 10 பரீட்சார்த்திகள் வினாத்தாளை சுயமாக வாசிப்பதற்கோ அதற்குரிய விடையை எழுதவோ முடியாத நிலையில் உள்ளனர். இம்மாணவர்களுக்கென விசேடமாக 20 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர். ஒரு அதிகாரி வினாவை வாசிக்க, இன்னுமொரு அதிகாரி மாணவர்கள் கூறும் விடையினை ஒலிப்பதிவு செய்து பின்னர் அவர் சார்பில் எழுதுவதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாற்றுத் திறனாளிகளுக்கான கேட்டல் உபகரணங்கள், பார்வை குறைந்தவர்களுக்கான மேசை வில்லைகள், மேசை மின் விளக்கு, தாய், தந்தை அல்லது பாதுகாவலர் விண்ணப்பதாரியின் பார்வைக்கு தெரியும்படி இருப்பதற்கான அனுமதி அவர்களுக்கேயுரிய மேசை, கதிரை, சக்கர நாற்காலி ஆகியவற்றை உபயோகிக்க அனுமதிக்கபட்டிருக்கின்றது.

நாடு முழுவதுமுள்ள 4300 பரீட்சை நிலையங்களில் இம்முறை சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இன்று முதல் 20 ஆம் திகதி வரையிலும் பின்னர் வினாத்தாள் திருத்தும் பணியின் போதும் ரோந்து நடவடிக்கைகள் உள்ளிட்ட விசேட பாதுகாப்பினை வழங்க பொலிஸ் மற்றும் முப்படையினர் உறுதியளித்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக வினாத தாள் அச்சிடும் அச்சகம் விசேட கணனி தொழில்நுட்பத்தின் கீழ் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது. அச்சகத்தில் பணிபுரிவோர் சீருடை அணிந்திருப்பதுடன், அச்சகத்திற்குள் வருவோரும் வெளியேறுவோரும் பூரண சோதனைக்குட்படுத்தப்பட்டு வருவதனால், எவ்வித குளறுபடிகளும் இடம் பெறுவதற்கு வாய்ப்பில்லை என்றார்கள்.



கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் அன்மையில் நடைபெற்ற நத்தார் இசை ஆராதனையின் போது அருட்தந்தை உரையாற்றுவதையும் விழிப்புலன் இழந்த மாணவன் தொடுகை மூலம் வாசிப்பதையும், மாணவர்களின் கலை நிகழ்வினையும் காணலாம்.






# நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா நேற்று ஜோனஸ்பெர்க்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அமைதியாக இறந்தார் என்று தற்போதைய ஜனாதிபதி ஜேக்கப் ஸுமா அறிவித்துள்ளார். அவரது குடும்ப உறுப்பினர்கள் அவரது இல்லத்தில் சூழ்ந்திருக்கையில் அவரது உயிர் பிரிந்துள்ளது.

யூலை 18, 1918 இல் பிறந்த நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் ஆவார். அதற்கு முன்னர் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.

தொடக்கத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பின்பு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். இவர்கள் மரபுசாரா கெரில்லாப் போர் முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத் தினர்.

மண்டேலாவின் 27 ஆண்டு சிறைவாசம், நிறவெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது. சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் கழித்தார்.

1990 இல் அவரது விடுதலைக்கு பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாபிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா, உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக விளங்குகிறார். தொண்ணூற்று ஐந்து வயதான மண்டேலா, இனவெறி ஆட்சியில் ஊறிக்கிடந்த தென்னாபிரிக்காவை மக்களாட்சியின் மிளிர்வுக்கு இட்டுச் சென்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அமைதிவழிப் போராளியாக, ஆயுதப் போராட்டத் தலைவனாக, தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக 27 ஆண்டுகள் சிறையில் வாடி பின்னர் விடுதலையாகி குடியரசுத் தலைவராக, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராக இவரின் அரசியல் பயணம் தொடர்ந்தது.



உலக சமாதானத்துக்காக மண்டேலா ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவர் சிறையில் இருக்கும் போதே இந்திய அரசு 'நேரு சமாதான விருது' வழங்கியது. கணவர் சார்பில் வின்னி டில்லிக்கு சென்று அந்த விருதைப் பெற்றார்.

1990இல் இந்தியாவின் 'பாரத ரத்னா' விருதும் வழங்கப்பட்டது.

1993இல் உலக அமைதிக்கான நோபல் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது. அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான மகாத்மா காந்தி சர்வதேச விருது நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளான யூலை 18ஆம் திகதியை சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக ஐ.நா. அறிவித்துள்ளது.

# நெல்சன் மண்டேலாவுக்கு உலகத் தலைவர்கள் இரங்கல்



நெல்சன் மண்டேலாவின் மறைவிற்கு ஐ.நா. பொது செயலாளர் பான்-கி-மூன், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, முன்னாள் அதிபர் பில் கிளிண்டன், இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மண்டேலா மறைவுக்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், மண்டேலா மனித நேயத்தின் அடையாளமாக திகழ்ந்ததாகத் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்க நாட்டு மக்கள் அனைவருக்கும் தம் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

மண்டேலா மறைவுக்கு வருத்தம் தெரிவித்துள்ள சீனா, மண்டேலா சீன மக்களின் பழம்பெரும் தோழராக விளங்கியதாக தெரிவித்துள்ளது. சீன வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் ஹாங் லீ கூறுகையில், சீனா-தென்னாபிரிக்கர் இடையேயான நட்பு வலுப்பெற மண்டேலா வரலாற்றுச் சிறப்பு மிக்க பணிகளை ஆற்றியுள்ளார் என்றார். இந்த உலகம் இனி நெல்சன் மண்டேலா போன்ற ஒரு தலைவரைக் காணாது என, மண்டேலா மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மேலும், லட்சோப லட்ச மக்களை ஊக்குவித்த ஒப்பற்ற தலைவர் மண்டேலா, அவரால் ஈர்க்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். அதனால் எனது முதல் அரசியல் நடவடிக்கை நிறவெறிக்கு எதிராக குரல் கொடுப்பதாகவே இருந்தது, எனத் தெரிவித்துள்ளார்.

மண்டேலா மறைவுக்கு வருத்தம் தெரிவித்துள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இந்த உலகின் சுடர்ஒளி மறைந்து விட்டாதாகக் கூறியுள்ளார். மேலும், மண்டேலா சமகால மக்களுக்கு மட்டும் கொண்டாடும் தலைவன் அல்ல, காலத்தால் வெல்ல முடியாத தலைவன், எனத் தெரிவித்துள்ளார்.

மறைந்த தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, நீதியின் காவலர் என புகழாரம் சூட்டியுள்ளது ஐ.நா. அமைப்பு. நிறவெறிக்கு எதிரான போராட்டத்தில் பல்வேறு தியாகங்களை செய்தவர் மண்டேலா எனவும் தெரிவித்துள்ளது.

# மாமனிதன் மண்டேலா



மண்டேலா மீண்டிந்நாள் வருகின்றாய்
எனுஞ்செய்தி வானில் வந்து
நெஞ்செல்லாம் நிறைகின்ற(து) ஐயாநீ
வெஞ்சிறையில் நெடுநாள் வீழ்ந்தும்
ஒன்றாலும் குறையாத நெஞ்சுறுதி
யொடுநின்றிவ் வுலக மெல்லாம்
கொண்டாடும் மாமனித னாய்நிமிர்ந்தாய்
வெள்ளையர்தம் கூற்ற மானாய்.

நின்வரவுக் காய்இந்நாள் நின்மக்கள்
விழித்திருப்பர், நேரில் வந்துன்
புன்னகையைக் கையசைவைக் கண்டுலடம்
புளகிப்பர், உலக மெல்லாம்
உன்னிப்பாய் நீசொல்லும் ஒவ்வொருசொல்
லும்கேட்கும், ஓகோ, இந்நாள்
உன்திருநாள் மண்டேலா உத்தமனே,
யாருயர்ந்தார் உன்னைப் போல!

நிறம்பெரிதென் றொருநெறியை நிலைநாட்டத்
தலைகீழாய் நிற்பார் முன்னே
அறம் பெரிதென் பதுநிறுவி மாமனித
னாய்நிமிர்ந்தாய் ஐயா! முற்றுந்
துறந்தவருள் எவர் உன்போல் சுகமனைத்தும்
துறந்துதவம் தொடர்ந்து செய்தார்
நிறைந்தபுகழ் படைத்துயர்ந்தாய் நெல்சன்மண்
டேலாநீ நீடு வாழ்க.

மாறாத கொள்கையொடு நிற்பவரெல்
லாருமுனை வணங்கு வார்கள்
ஆறாத வடுச்சுமந்து வாழ்கின்ற மக்கள்பலம்
அடைவர் உன்னால்
கூறாத நாவில்லை, குளிராத மனமில்லை,
உன்பேர் இந்நாள்
ஏறாத அரங்கில்லை, எழுதாத ஏடில்லை,
எழுக, வெல்க!

(நெல்சன் மண்டேலா சிறைமீளும் செய்தி கேட்ட போது பாடியது)

சோ.பத்மநாதன்

# 10 மாவட்டங்களுடன் தெலுங்கானா; மத்திய அமைச்சரவை ஒப்புதல்



இந்தியாவின் தெலுங்கானா பகுதியில் உள்ள 10 மாவட்டங்களை இணைத்து தனி தெலுங்கானா மாநிலம் அமைக்கும் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த பத்து ஆண்டுகள் வரை இரு மாநிலங்களுக்கும் ஹைதராபாத் பொது தலைநகரமாக இருக்கும் என உள்துறை அமைச்சர் சுஷீல்குமார் ஷிண்டே நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார். அனந்தப்பூர், கர்னூல் மாவட்டங் களை தெலுங்கானாவுடன் இணைக்கும் திட்டம், கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

தெலுங்கானா பகுதியில் உள்ள 10 மாவட்டங்களுடன் ராயலசீமா பகுதியில் உள்ள அனந்தப்பூர், கர்னூல் மாவட்டங்களை இணைத்து, ராயல தெலுங்கானா உருவாக்க மத்திய அரசு முடிவு செய்திருந்தது.

இத்திட்டத்திற்கு தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி (டிஆர்எஸ்), தெலுங்கானா கூட்டுப் போராட்டக் குழு, பா.ஜ.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட பல்வேறு கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சித் தலைவர் சந்திரசேகர் ராவ் வியாழக்கிழமை முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்புவிடுத்திருந்தார்.

'இரு மாநிலங்களுக்கும் சமமான வாய்ப்பு அளிக்கும் வகையில் அரசமைப்புப் பிரிவு 371இன் படி சிறப்பு அந்தஸ்து அளிக்கப்படுகிறது. நடப்புக் கூட்டத்தொடரிலேயே இம்மசோதா தாக்கல் செய்யப்படும்' என உள்துறை அமைச்சர் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

# உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டுள்ளது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு, உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையாக தனியாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கின் மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரை வாழும் அனைத்து மாணவர்களும் கல்வியைப் பெறும் நோக்கில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரினால் உடுத்துறை மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்ளீர்க்கப்பட்டு சுவிஸ் நிறுவனத்தினதும், அரசின் மகிந்தோதயத் திட்டத்தின் ஊடாகவும் 1AB பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இப்பிரதேச மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலையை நோக்கிச் செல்லாமல் சிறப்பான கல்வி வாய்ப்பு இப்பாடசாலையிலே ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், நவீன அதிபர் விடுதியும் ஆண், பெண் ஆசிரியர்களுக்கான விடுதியும் இப்பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டதையடுத்த இதன் ஆரம்பப் பிரிவு பாடசாலையின் சொந்தக் காணியில் உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்புவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிபர் சி.ஜெயந்திரன் தலைமையில் நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பாடசாலையைத் திறந்து வைத்தார்.

# மாபெரும் புத்தகக் கண்காட்சி

(திருநெல்வேலி)

கொக்குவில் புகழ் வெளியீட்டகத்தின் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் நாளை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இடம்பெறவுள்ள இக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக உயரப்புலம் மெ.மி.வித்தியாலய அதிபர் கு.திலீபன், யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் பா.ரமேஷ் கண்ணா, நமது முரசொலி பிரதம ஆசிரியர் ஏ. ரஞ்சித்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக மல்லாவி ஹற்றன் நஷனல் வங்கி திட்ட நிறைவேற்று அதிகாரி யோ.பாலகுமார், கொக்குவில் இலங்கை வங்கி முகாமையாளர் பீ.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை, இந்திய வெளியீடுகளும், பிரசித்தி பெற்ற பதிப்பகங்களின் நூல்களும், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்களும் இக்கண்காட்சியிலும், மலிவு விற்பனையிலும் பெற்றுக்கொள்ள முடியும். (137)

# தங்க நகை மோசடி; பெண்கள் இருவர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையில் மூன்று தடவை போலி நகைகளை அடைவு வைத்த இரண்டு பெண்கள் அச்சுவேலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக காங்கேசன்துறை பொலிஸ் அத்திட்சகர் தமயந்த விஜியசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இருபாலையைச் சேர்ந்த ஒரு பெண்ணும், மன்னாரைச் சேர்ந்த ஒரு பெண்ணும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட வங்கியின் கிளை முகாமையாளரினால் கடந்த 29 ஆம் திகதி செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடைபெற்ற முதலாவது சம்பவத்தில் போலி நகைகளை அடைவு வைத்து 184 ஆயிரம் ரூபாவும், மற்றைய சம்பவத்தில் 175 ஆயிரம் ரூபாவும், மூன்றாவது சம்பவத்தில் 165 ஆயிரம் ரூபாவும் பெறப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# நாடு திரும்ப மறுக்கும் பல்கலை விரிவுரையாளர்கள்

(கொழும்பு)

புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீண்டும் நாடு திரும்புவதை வெறுப்புடன் பார்க்கின்றனர்.

மேலதிக கல்விக்காக புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்றுள்ள சுமார் 500 விரிவுரையாளர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை என உயர்கல்வி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

அறிவித்தல் விடுக்கப்பட்டதை அடுத்து, சுமார் 20 பேர் நாடு திரும்பியுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை நாடு திரும்பாத விரிவுரையாளர்கள் பெற்றுக் கொண்ட பணத்திலிருந்து கட்டம் கட்டமாக மீள அறவிடப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு திரும்பியுள்ள விரிவுரையாளர்களுக்கு மீண்டும் பல்கலைக்கழகங்களில் பதவிகளை வழங்குவதில் சிக்கல் தோன்றியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களுக்கு பதவிகளை வழங்கும்போது, ஏற்கனவே பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற விரிவுரையாளர்களுக்கு அநீதி ஏற்படாதவாறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# களை பிடுங்குதல் மும்முரம்

(ஆனைக்கோட்டை)

தற்போது பெய்து வரும் மழையினை அடுத்து நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதி நெல் வயல்களில் களை பிடுங்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

களை பிடுங்கும் பணியில் ஆண்களும், பெண்களும் ஈடுபட்டு வரும் நிலையில், இவர்களுக்கான நாட்கூலியாக 500 ரூபா வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

இதேவேளை, வயல் நிலங்களில் அதிகளவு உயரத்தில் வளர்ந்துள்ள களைகளைப் பிடுங்கி விற்பனை செய்வதிலும் சிலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். (104)

# கொழும்பு நகரில் தீ விபத்து

(கொழும்பு)

புறக்கோட்டை - போதிராஜமாவத்தையில் புதிதாக கட்டப்பட்ட கடைத் தொகுதியொன்றில் நேற்று இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீயினால் கடைத் தொகுதி பாரியளவில் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 15 தற்காலிக வர்த்தக நிலையங்கள் இதனால் முற்றாக அழிவடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணிகளில் தீயணைப்பு வீரர்கள் நேற்று இரவு முழுவதும் போராடினர்.

# பருத்தித்துறை கடலில் சடலம் மீட்பு

வடமராட்சியின் பருத்தித்துறை வெளிச்சவீடு கடற்கரைப் பகுதியில் சிதைவடைந்த நிலையில் ஆணொருவரது சடலம் நேற்று மதியம் கரை ஒதுங்கியுள்ளது.இளம் வயதினருடையதாக இருக்கலாமென சந்தேகிக்கப்படும் இச்சடலம் தொடர்பாக அப்பகுதி மீனவர்கள் வழங்கிய தகவலின் பேரில் பொலிஸார் சம்பவ் இடத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன், சடலத்தை மீட்டு அடையாளம் காண ஏதுவாக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அண்மை நாட்களில் வடமராட்சி உள்ளிட்ட பகுதிகளில் மீனவர்கள் எவரும் காணாமற் போனமை தொடர்பில் தகவல்கள் இல்லையெனவும் அதனால் இந்தச் சடலம் தமிழக மீனவரது சடலமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (116)

## பல்கலைக்கழக...

யகம், விவேகானந்தா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் அதி நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட விருக்கின்றன. அந்த வளாகத்தைச் சுற்றிய பிரதேசங்களில் உட்கட்டுமானங்கள் மற்றும் வங்கிகள், supermarket போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் உருவாக்குவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே முன்மொழிவுகளைச் செய்திருந்தார்.

அதேவேளை, வினைத்திறனுள்ள மாணவர்களை உருவாக்கும் வகையில் திட்டங்களை அமுல்படுத்த வேண்டுமென்று அடிக்கடி அமைச்சர் கூறி வருகின்றார். அந்த வகையில், பட்டப்படிப்பை முடித்துவிட்டு வெளியேறும் பட்டதாரிகளை நல்ல வினைத்திறனுள்ள பட்டதாரிகளாக வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கையை யாழ். பல்கலைக்கழகமும் எடுப்பது தொடர்பாக அமைச்சர் உரிய கவனம் செலுத்த வேண்டுமென இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களை அனுமதிக்கும்போது கலைப்பீடத்துக்கான மாணவாகளின் எண்ணிக்கையைக் குறைத்து ஏனைய பீடங்களுக்கான மாணவர்களை கூடுதலாக உள்வாங்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் அவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

## காலமானார்...

நேற்று இரவு முழுவதும் நடத்தினர்.

அவரது வாழ்க்கையைக் கொண்டாடும் வகையில் வேறு பலர், நிறவெறிக்கெதிரான போராட்டப் பாடல்களைப் பாடி, நடனமாடினர். சிலர் தங்கள் சிறு குழந்தைகளுடன் வந்திருந்ததைக் காண முடிந்தது. தென்னாபிரிக்காவில் எல்லாக் கொடிகளும் அரைக்கம்பத்தில் பறக்கின்றன.

அதேவேளை, எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அரச மரியாதையுடன் மண்டேலாவின் இறுதிச் சடங்கு நடக்கவுள்ளதாக தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் ஸுமா அறிவித்துள்ளார். 10 நாட்களுக்கு கொடிகள் அரைக்கம் பத்தில் பறந்துகொண்டிருக்கும்.

துக்க அனுஷ்டிப்புக் காலம் தென்னாபிரிக்காவில் துவங்கிய நிலையில், தென்னாபிரிக்காவின் அனைத்துப் பொது, அரசு கட்டடங்கள் மற்றும் உலகெங் கும் உள்ள தென்னாப்ரிக்கத் தூதரகங்கள் அனைத்திலும், அஞ்சலிக் குறிப்புகளை மக்களும் பிரமுகர்களும் எழுத உதவும் வகையில், அஞ்சலிப் புத்தகங்கள் வைக்கப்படுகின்றன.

ஜோனஸ்பர்கின் புறநகர்ப்பகுதியில் உள்ள எப்.என்.பி அரங்கத்தில், தேசிய துக்கப் பிரார்த்தனை நிகழ்வு ஒன்று நடத்தப்படவிருக்கிறது. அதன் பின்னர், பிரிட்டோரியாவில் மூன்று நாட்கள் நெல்சன் மண்டேலாவின் உடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருக்கும். நெல்சன் மண்டேலாவின் உடல் கிழக்கு கேப் பகுதியில் அவர் வளர்ந்த குனு கிராமத்தில் அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படும்.

## வடக்கு கடலில்...

தாது மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் படகு சேதமடைந்த நிலையில் கரையேறியுள்ளார்.

வலைகள், பிடிக்கப்பட்ட மீன்கள் என்பனவற்றையும் இழந்து தெய்வாதீனமாக உயிர் தப்பி பருத்தித்துறை முனையை வந்தடைந்துள்ளார்.

அத்துடன் பொலிகண்டி கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த படகு ஒன்றும் அதன் இயந்திரமும் அலைத் தாக்கத்தினால் சேதடைந்துள்ளது.

இவ்வாறான காலநிலையால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க தாம் உரியவர்களுடன் பேசவுள்ளதாக மீனவ சங்கங்களின் சமாசத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.(116)

## மக்களின்...

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யுத்தத்துக்குப் பின்னரான வடக்கின் நிலைவரம் குறித்து விரிவாக எடுத்து விளக்கினார்.

வடக்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக வடக்கு மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கையில் சற்று தேக்கநிலை ஏற்பட்டதாகவும், எனினும், இவ்விடயத்தில் எமது முயற்சி தொடரும் என்றும் அமைச்சர் ஐ.நா. அதிகாரியிடம் எடுத்து விளக்கினார்.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சினமன் ஹோட்டலில், சுமார் 45 நிமிடங்கள் வரை நீடித்த இக்கலந்துரையாடலின் போது வடக்கிற்கும், வடக்கிற்கு வெளியிலும் இதுவரையில் மீள்குடியேற்றப்படாத மக்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

சிங்கள மக்களை வெறுப்புக் கொள்ள வைக்கும் வகையில் சில தமிழ்த் தலைமைகள் எடுக்கும் நடவடிக்கைகள், இணக்கப்பாட்டு அரசியல் நகர்வுகளுக்கு தடையாக இருக்கின்றன என்ற விடயமும் அவருக்கு தெளிவாக்கப்பட்டது.

அமைச்சரின் ஆலோசகரும் ஈ.பி.டி.பி.யின் ஊடகப் பேச்சாளருமான சி.தவராசாவும் இச்சந்திப்பின் போது கலந்துகொண்டார்.

## யப்பானிய...

பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் வடக்கு முதலமைச்சர் ஆகியோரையும் யசூசி அகாஷி சந்திப்பார் என்றும் இரண்டு நாட்கள் அவர் கொழும்பில் தங்கியிருப்பார் எனவும் தூதரகம் கூறியயது.

அத்துடன், அவர் வடபகுதிக்கும் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நீதிமன்ற...

காங்கேசன்துறை வீதியில் நின்றனர். குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்த தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி விட்டுச் சென்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழ்.நகரில் முளைவிடும் வழிப்பறி;

# பொலிஸாரிடம் சிக்கியவர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

மயக்கமருந்து கலந்த குடிபானத்தினை ஒருவருக்கு கொடுத்து அவருடைய பணம், நகைகளை திருடிய வயோதிபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி நேற்று உத்தரவிட்டுள்ளதாக யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யு.ஏ.எல்.விக்கிரமாரட்சி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை யாழ். முனியப்பர் ஆலயத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளது. யாழ். முனியப்பர் ஆலயப்பகுதியில் வெளியிடங்களிலிருந்து வருபவர்கள் ஓய்வெடுத்துச் செல்வது வழமை. அந்தவகையில் கடந்த புதன்கிழமை அவ்விடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு அருகில் உரையாடியவாறு அமர்ந்திருந்த வயோதிபர் மற்றும் இளைஞர் குளிர்பானம் ஒன்றை மேற்படி வவுனியா நபருக்கு கொடுத்துள்ளனர்.

குளிர்பானத்தினை குடித்த நபர் மயக்கமடையவே, குளிர்பானம் குடிக்கக் கொடுத்த இருவரும் மயக்கமடைந்திருந்த நபரின் ரூபா 40 ஆயிரம் பணம் மற்றும் நகைகளை அபகரித்துச் சென்றனர்.

மயக்கம் தெளிந்த வவுனியாவாசி, இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின் பிரகாரம் யாழ். நகரில் வியாபாரம் மேற்கொள்ளும் மட்டக்களப்பு, ஏறாவூரினைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

தொடர்ந்து, குறிப்பிட்ட இளைஞரை தேடிய போதும், அவர் தலைமறைவாகியிருந்தார். இந்நிலையில் பொலிஸார் மேற்படி வயோதிபரை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தினர். நீதிபதி, மேற்படி நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும், தப்பியோடிய இளைஞனை பிடிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

(வேலணை)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு கிராமங்களுக்கும் வேலணை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது. (21)

## மாணவர்களுக்கு கௌரவிப்பு



(மானிப்பாய்)

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளில் கற்று இவ்வருடம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இக் கௌரவிப்பு நிகழ்வானது 'வாழ்விற்கு ஒளியேற்றுவோம்' என்னும் தொனிப்பொருளில். சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் சுன்னாகம் லயன்ஸ் கழக தலைவர் லயன். எஸ்.ஹரிகரன் தலைமையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வின் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் பிராந்திய அலோசகரும் வைத்தியருமான லயன்.வை.தியாகராஜா கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) பி.ரவிச்சந்திரனும் லயன்ஸ் கழகங்களின் கல்வித் துறைக்கான மாவட்டத் தலைவர் வைத்தியர் லயன். ஜீ.சந்திரசேகரமும் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் லயன்.எம்.செல்வஸ்தானும் கலந்து கொண்டார். இவ் நிகழ்வில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (48)

## விபத்தில் சிக்கியது பஸ்; 37 பேர் காயம்

(வெயாங்கொடை)

வெயாங்கொடை - தல்கஸ்மொட்டே பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 37 பேர் காயமடைந்துள்ளனர். இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து நேற்று பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் 2 மதகுருமார்களும் அடங்குகின்றனர். இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், தனியார் பஸ் ஒன்றும் விபத்துக்குள்ளானமை தெரியவந்துள்ளது.

## கிணற்றில் இருந்து சடலம் மீட்பு

நாராந்தனை வடக்கு, தம்பாட்டி பகுதியிலுள்ள கிணறொன்றுக்குள்ளிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த மகாதேவன் பிரதீப் (வயது - 23) என்ற இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள மேற்படி இளைஞன், கிணற்றுக்குள் தவறுதலாக விழுந்தே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இளைஞன் நேற்றுக் காலையில் முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்கு சென்ற போது, கிணற்றடிக்கு அருகில் இருந்த பாசியில் சறுக்குண்டு கிணற்றுக்குள் வீழுந்துள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி இளைஞனின் சடலத்தினை யாழ். ஊர்காவற்துறை பொலிஸார் மற்றும் நீதிபதி எஸ்.எம்.மகேந்திரராஜா பார்வையிட்டதையடுத்து, சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (25)

## கிளிநொச்சி மாவட்டத்தில் ஊர்தி பவனி

(கிளிநொச்சி)

பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை ஊர்தி பவனி இடம்பெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வரும் இவ் ஊர்தி பாலியல் பலாத்காரம் சார்ந்த விடயங்களை தாங்கியதாக வரவுள்ளது. காலை 9 மணிக்கு வரும் இவ் ஊர்தியை பரந்தன் குடியிருப்பில் வரவேற்வுள்ளனர்.

காலை 10 மணிக்கு கரடிப் போக்கில் வீதி நாடகம் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரையில் ஊர்தி செல்ல உள்ளது.

அங்கு வைத்து அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது. ஊர்வலத்தில் வருபவர்களுக்கு கருத்துரைகளை அரசாங்க அதிபரும், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவர் மாசிலாமணி ஜெயராஜா, சட்டத்தரணி திருமதி. சதீஸ்குமார் விஜயராணி ஆகியோர் வழங்க உள்ளனர்.

மதியம் 12.15 மணிக்கு வீதி நாடகம் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஊர்தி பிற்பகல் 2.30 மணிக்கு சாந்தபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய கிராமங்களுக்குச் செல்லவுள்ளது. அங்கு வைத்தும் வீதி நாடகம் நடைபெறவுள்ளது. (90)

## தமிழ்ச் சங்கத்தின் பாரதி விழா

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் பாரதி விழாவும் இணையத்தளத் தொடக்க நிகழ்வும் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பாரதி பிறந்த நாளன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்ச் சங்க உபதலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் அனுசரணையாளர்களான கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் தம்பதியரும், திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் தி.ஸ்ரீமோகனராஸ் தம்பதியரும் மங்கள விளக்கேற்றுவர்.

யாழ். கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் கௌரி முகுந்தன் தமிழ்த் தெய்வ வணக்கம் இசைப்பார். வரவேற்புரையை இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சுகந்தினி சிறிமுரளிதரனும் தொடக்கவுரையை தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் வாழ்த்துரையைத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் வழங்குவர்.

தமிழ்ச்சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைத் (www.thamilsangam.org) துணைவேந்தர் தொடக்கி வைப்பார். இதன் அறிமுகவுரையை மருத்துவபீடப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா வழங்குவார். தொடர்ந்து இணையத்தளத்தை வடிவமைத்த தங்கராஜா தவரூபனுக்கான மதிப்பளிப்பு இடம்பெறும்

சிறப்பு நிகழ்வுகளாக பாரதி யார்? என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்புரையாற்றுவார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீ.தர்ஷனனின் குரலிசையுடனும் நடனத்துறை தலைவர் கி.அருட்செல்வியின் வழிகாட்டலிலும் இராமநர்தன் நுண்கலைத்துறையினர் வழங்கும் புதுமைப் பெண்கள் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகமும், யாழ். முன்னணிக் கலைஞர்கள் பல்வகையான பக்கவாத்தியங்களுடன் இணைந்து வழங்கும் நல்லதோர் வீணை என்ற பொருளில் அமைந்த பாரதி பாடல்களால் ஓர் இசை அர்ச்சனையும் இடம்பெறவுள்ளன.

இவ்விசை அர்ச்சனையில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வைத்தியர்கள் என பல்வேறு துறையினர் பங்கெடுக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்ச்சங்கம் ஒன்றின் தேவையை உணர்ந்து தமிழறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் ஒன்றுகூடி 2012 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச்சங்கத்தை உருவாக்கிய பின்னர் இடம்பெறும் இரண்டாவது பாரதி விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (48)

## கழுத்தை நெரிக்கும் பொருளாதார நெருக்கடி

### அம்பலமாகும் சமூக குறிகாட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வங்கிக்கடன்களை அடைப்பதற்காக தனது மனைவியை விபசாரம் செய்யும்படி வற்புறுத்திய கணவன் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தியிருப்பதாக கே.கே.எஸ்.பொலிஸ் அத்தியட்சகர் தமயந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர். இந்தத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி அரியாலை பூம்பூகாரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாருக்கு எதிராக அவரது மனைவி யாழ்.பொலிஸ் நிலையத்தில் இது குறித்த முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ததனை அடுத்து கணவர் கைது செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுன்னாகம் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் குறித்த நபர் கடன் பெற்றுவிட்டு அதனை அடைப்பதற்காக தனியார் மூன்று பேரிடம் கடன் பெற்றிருக்கிறார்.

இந்நிலையில் அவர்களிடம் பெற்ற கடனை அடைப்பதற்காக தனது மனைவியை விபசாரம் செய்து பணம் பெறுமாறு வற்புறுத்தியிருக்கின்றார். இந்நிலையிலேயே குறித்த மனைவி யாழ்.பொலிஸ் நிலையத்தில் கணவருக்கு எதிராக முறைப்பாட்டைப் பதிவு செய்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரது வீட்டில் வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவரையும் அழைத்துவந்து தங்கவைத்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## முதியோர் இல்லத்தில் இணைவு

(திருநெல்வேலி)

இயலாத நிலையில் தாழ்வாரங்கள், கோவில்கள், மடங்களில் தங்கி அங்கும் இங்கும் அலைந்து திரிந்த 80 வயது முதியவர் ஒருவர் நேற்று கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

அச்சுவேலி மேற்கைத் தற்காலிக முகவரியாகக் கொண்ட இளையதம்பி இராசையா என்பவரே இவராவார். இவரது பரிதாப நிலையை உணர்ந்த அப்பகுதி கிராம சேவையாளர், சமூக சேவை உத்தியோகத்தர், முதியோர் சங்கத்தில் இணைந்து இம் முதியவரை இல்லத்தில் சேர்த்தனர்.

பலாலியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோது இவரது உறவுகளை இவர் தவற விட்டிருந்தார். அதற்குப் பிறகு அவர்களுடனான எந்த உறவும் இவருக்கு இல்லாமற் போனது. எவருமின்றி இவர் அலைந்தார்.

இவரது முன்னைய பலாலி காங்கேசன் துறைப்பகுதிக் கிராம சேவையாளருடன் அச்சுவேலி மேற்குக் கிராம உத்தியோகத்தர் தொடர்புகொண்டு இவரைப்பற்றி விசாரித்தபோது அங்கு இவரது விபரங்கள் எதுவும் இல்லை எனத் தெரியவந்தது.

இவரது உறவுகள் பற்றி ஏதும் செய்தி கிடைத்தால் கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (137)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.